பாடசாலைக் கற்றல் நேர நீடிப்பு
கைவிடப்பட்டது!
02 பக்கம்



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
மலர் : 02, இதழ் : 501 சுபகிருது வருடம், சித்திரை மாதம் 05ஆம் திகதி திங்கட்கிழமை (18.04.2022) ஹிஜ்ரி - 1443, ரமழான் - 16 , 0115886187 - பக்கங்கள் 12
விலை ரூ.30



கல்முனை இருதயநாதர் ஆலயத்தின் முன்னால் மக்கள் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு இதுவரை நீதி கிடைக்க வில்லை எனவும் உடனடியாக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை நேற்று மேற்கொண்டனர். (படம்:- பாறுக் ஷிஹான்)

## கோல்பேசில் நிறுத்தப்பட்ட பொலிஸ் ட்ரக்குகளை அரசு அகற்றியதெப்படி?

### வெளியானது முக்கிய தகவல்

02 பக்கம்



# அரசியலமைப்பின்படி பதவியில் நீடிப்பேன்!

### விலகும் பேச்சுக்கே இடமில்லையென முன்னாள் அமைச்சர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி திட்டவட்டம்

**ஆட்சியை பொறுப்பேற்க விடுத்த அழைப்புக்கு எதிர்க்கட்சியிடம் பதில் இல்லை - நாட்டை இப்படி கொண்டுசெல்ல முடியாது என்றும் கோட்டா சுட்டிக்காட்டு**

•நா.தினுஷா

"அரசாங்கம் பதவி விலக வேண்டுமென வலியுறுத்தப்பட்டதால் அமைச்சர்கள் பதவி விலகி, புதிய அரசுக்கு இடமளித்தனர். ஆனால் புதிய அரசொன்றை அமைக்க முன்வருமாறு நான் எதிர்க்கட்சியிடம் கோரிக்கை விடுத்தேன். ஆனால் அவர்களிடம் அதற்கான பதில் இல்லை. அப்படியாயின் ஆட்சியமைக்கக் கூடியளவு நாடாளுமன்ற பலம் அவர்களிடம் இல்லை. எங்களிடம் நாடாளுமன்ற பலம் இருக்கிறது. எனவே அமைச்சரவையை மீள நியமித்து, ஆட்சி நிர்வாகத்தை முன்னெடுக்கத் தீர்மானித்தேன்." 02 பக்கம்



தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு எண்ணெய் தேய்க்கும் நிகழ்வு நேற்று கோட்டை ரஜமகா விகாரையில் இடம்பெற்றது. (படப்பிடிப்பு – லலித் பெரேரா)

### கமெண்ட் கந்தர்..



கனடாக்காரன் போராட்டத்துக்கு பிரியாணி கொடுக்கிறானெண்டா நாட்டுக்குள்ள டொலரும் வரும்தானேடாப்பா.. டயஸ்போரா ஆக்கள் இன்னும் கொஞ்சம் உதவியள செஞ்சா டொலர் நெருக்கடியும் குறையுமெல்லே... பொசிட்டிவா யோசிங்கோ...

## காலிமுகத்திடலில் இடம்பெற்ற தொவில் நடனமும் மாந்திரீகமும்

### மாத்தறையிலிருந்து வந்த சூனியக்காரர்கள்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் பதவி விலகவேண்டும் எனக் கோரி கொழும்பு காலி முகத்திடலில் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக ஆரம்பிக் கப்பட்ட போராட்டம் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

அரசாங்கத்திற்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் இந்த போராட்டத்திற்கு நாடளாவிய ரீதியில் பல்வேறு பாகங்களிலும் இருந்து ஆதரவு வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், போராட்டக்காரர்களின் கோரிக்கைகளுக்கு அரசாங்கம் செவிகொடுக்காத நிலையில், நேற்று முன்தினம் காலிமுகத்திடலில் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதற்காக மாந்திரீக பூஜை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன. பில்லி சூனியம் செய்வதற்கென்று மாத்தறையில் இருந்து வந்த ஒருவர் விசேட பூஜை வழிபாடுகளை செய்துள்ளார். பெரும்பான்மை இன மக்களால் பல கோரிக்கைகள், ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டும் அரசாங்கம் பதவி விலகாததால்



இவ்வாறு பில்லி சூனியம் வைத்து அவர்களை வீட்டுக்கு அனுப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக சமூக வலைத்தளங்களில் புகைப்படங்கள் வெளியாகியுள்ளன.

## அமெரிக்காவை சென்றடைந்தது அலி சப்ரி தலைமையிலான குழு

### சர்வதேச நாணய நிதியத்துடன் முக்கிய பேச்சு

சர்வதேச நாணய நிதியத்துடன் இடம்பெறவுள்ள கலந்துரையாடலில் பங்கேற்பதற்காக நிதியமைச்சர் அலி சப்ரி தலைமையிலான குழு நேற்று வொஷிங்டன் சென்றடைந்துள்ளது.

அந்த குழுவில் நிதி அமைச்சர் அலி சப்ரி, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன ஆகியோர் அடங்கு கின்றனர். அமெரிக்காவின் - வொஷிங்டனில் சர்வதேச நாணய நிதியத்துடனான ஆரம்பகட்ட பேச்சு வார்த்தைகள் நாளைமுதல் 24ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அமைதியான போராட்டங்கள் மீது இராணுவ அதிகாரப் பிரயோகமில்லை

### பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

அமைதியான போராட்டங்கள் மீது இராணுவ அதிகாரம் பயன்படுத்தப் படாது என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்களை இலக்கு வைத்து எந்தவிதமான இராணுவ... 02 பக்கம்



## சர்வதேச நாணய நிதியத்தினது உதவி கிட்ட 9 மாதங்களாகலாம்

அதற்குள் சேவைக்கட்டணங்களில் உயர்வை எதிர்பார்க்கலாம் என்கிறார் சாந்தா தேவராஜன்

02 பக்கம்

## காலிமுகத்திடல் போராட்டக்காரர்களுக்கு பிரியாணி விநியோகித்த கனேடிய தமிழர்

### உதவிசெய்வோரை கண்டறியும் விசாரணைகளை ஆரம்பித்தது சி.ஐ.டி

02 பக்கம்




ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம், இன்று மாலை தனது இல்லத்தில் கட்சியின் எம்.பிக்களை சந்திக்கிறார். அதற்கான அழைப்பை அவர் இரண்டு நாட்களுக்கு முன்னர் விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் ஒன்றுபட்டு செயற்படுவது குறித்து இதன்போது ஆலோசிக்கப்படவுள்ளதாக தகவல்.

ஆனாலும் அனைத்து எம்.பி மாரும் இதில் கலந்து செல்வார்களா என்பதில் சந்தேகம் இருக்கிறதாம்.

## கண்டியிலிருந்து கொழும்பு நோக்கி பேரணி; சபாநாயகரிடம் நம்பிக்கையில்லாப் பிரேரணை

### ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்றக் குழு தீர்மானம்

02 பக்கம்

மக்கள் வங்கி ஊடாக வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பி வெற்றியாளர் ஆகுங்கள்




இறுதிச் சீட்டிழுப்பின் வெற்றியாளருக்கு
ரூ.10,000,000/-
மாதாந்த வெற்றியாளர்களுக்கு ரூ.1,000,000/- × 11 மாதங்கள்
ரூ.11,000,000/-
வாராந்த வெற்றியாளர்களுக்கு தங்கப் பவுண்
நாளாந்த வெற்றியாளர்களுக்கு ரூ.10,000/-
மேலும் மேலும் பணம் அனுப்பி, வெல்லும் வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்ளுங்கள்
செல்லுபடியாகும் காலம் 2022 பெப்ரவரி 01 தொடக்கம் டிசெம்பர் 31 வரை மட்டுமே.
+9477 157 6356
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது
www.peoplesbank.lk
1961 PEOPLE'S BANK CALL CENTRE
PEOPLE'S BANK
Pride of the Nation
AA- (lka) Fitch Rating, AAA- Brand Finance Rating
People's Bank is a licensed commercial bank supervised by the Central Bank of Sri Lanka.

# பிரதி சபாநாயகர் தெரிவின்போது கட்சியின் தீர்மானத்துக்கு அமையவே வாக்களிப்பேன்

## நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்



(சீனக்குடா நிருபர்)

அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் இடம்பெறவிருக்கின்ற பிரதி சபாநாயகர் தெரிவின்போது, கட்சியின் தலைமைக்கு கட்டுப்பட்டு, தலைவர் ரவூப் ஹக்கீமின் தீர்மானத்திற்கமைவாக வாக்களிக்கப் போவதாக திருகோணமலை மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் தெரிவித்துள்ளார்.

இந்த கருத்தினை நேற்று அவர் தனது உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் வெளியிட்டிருந்தார். இதேவேளை, பொதுஜன பெரமுன அரசுக்கு தான் இது காலம் வரைக்கும் வழங்கிவந்த ஆதரவை விலக்கிக்கொள்வதாக கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

20ஆவது அரசியலமைப்புத் திருத்தம், பெசில் ராஜபக்ஷவினால் கொண்டுவரப்பட்ட நிதி சம்பந்தப்பட்ட ஒரு பிரேரணை மற்றும் 2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பின் வாக்கெடுப்பு ஆகியவற்றுக்கு தான் அரசாங்கத்துக்கு ஆதரவாக வாக்களித்ததாகும். ஆனால் இனிவரும் காலங்களில் அரசாங்கத்தினால் கொண்டுவரப்படுகின்ற எந்த பிரேரணைக்கும் ஆதரவாக வாக்களிப்பதில்லை என்று தீர்மானித்துள்ளேன் என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும், இது தொடர்பாக அவர் தனது தவறை உணர்ந்து இன்னும் தனக்கு வாக்களித்த மக்களிடம் மன்னிப்புக் கோரவில்லை என்று சமூக வலைத்தளங்களில் பரவலாகப் பேசப்பட்டு வருகின்றமையும் இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது.





காலியில் அமைக்கப்பட்டுள்ள 'கோட்டா கோ கம' கூடாரங்கள் நேற்று பொலிஸாரால் அகற்றப்பட்டபோது...

### சர்வதேச நாணயத்தினது...

சர்வதேச நாணய நிதியத்தின் முதல் தவணை கொடுப்பனவு இலங்கைக்கு கிடைப்பதற்கு ஆறுமுதல் ஒன்பது மாதங்கள் ஆகலாம் என்று அரசாங்கத்தின் ஆலோசகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்திற்கும் நிதியமைச்சர் அலி சப்ரி தலைமையிலான இலங்கைக் குழுவிற்கும் இடையிலான பொருளாதார மீட்புப் பொதி தொடர்பான பேச்சுவார்த்தைகள் இன்று வொசிங்டனில் ஆரம்பமாகவுள்ளது.

இந்நிலையில் பொருளாதார விடயங்களில் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கும் நிபுணர்களில் ஒருவரான சாந்த தேவராஜன், இந்த தகவலை ஊடகம் ஒன்றிடம் வெளியிட்டுள்ளார்.

அமெரிக்க ஜோர்ஜ்டவுன் பல்கலைக்கழகத்தின் சர்வதேச அபிவிருத்தித்துறைக்கான பேராசிரியராக பதவி வகிக்கும் அவர், சர்வதேச நிதிகளை பெற்றுக்கொள்வதற்கு ஒரு நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மை தடையாக இருக்காது என்று குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி அல்லது ஏனைய சர்வதேச அமைப்புகளிடமிருந்து நிதி பெறுவதற்கு இலங்கையின் அரசியல் உறுதியற்ற தன்மை ஒரு தடையாக இருக்காது என்று அவர் தெரிவித்துள்ளார்.

வரி அதிகரிப்புகள், செலவுக் குறைப்புக்கள் மற்றும் ஏழைகளுக்கான நிதி பரிமாற்றங்கள் போன்றவற்றை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதா என்பவற்றையே இந்த அமைப்புகள் பார்க்கின்றன. இந்த விடயங்களில் திருப்தி ஏற்பட்டால், அமைப்புக்கள் ஒரு நாட்டுக்கு பணத்தை வழங்கலாம். அது சிறுபான்மை அரசாங்கமாக இருந்தாலும் சரி அல்லது சிறிய பெரும்பான்மை அரசாங்கமாக இருந்தாலும் சரி, இந்த விடயத்தில் பிரச்சினை எழாது என்றும் சாந்த தேவராஜன் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே மத்திய வங்கியினால் அறிவிக்கப்பட்ட கடன் சேவை கொடுப்பனவுகளை தற்காலிகமாக இடைநிறுத்துவது மற்றும் கடன் மறுசீரமைப்பு போன்ற அறிவிப்புகள், இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி போன்றவற்றிலிருந்து நிதி ஆதாரங்களைப் பெறுவதற்கான வாய்ப்புகளை அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், நாட்டின் வரிகளில் சில அதிகரிப்புகளை மக்கள் எதிர்பார்க்கலாம். எரிபொருள் மற்றும் மின்சார கட்டணங்களில் அதிகரிப்பு நிகழலாம் என்றும் அவர் எதிர்வுகூறியுள்ளார்.

### கோல்பேசில்...

கடந்த சனிக்கிழமை காலிமுகத்திடல் அருகே கனரக பொலிஸ் வாகனங்கள் சாரை சாரையாக நிறுத்தப்பட்டிருந்தன.

ஆர்ப்பாட்டக்காரர்களை அகற்றி அவற்றில் ஏற்றிச்சென்று கொழும்பு புறநகர்ப் பகுதியில் இறக்கிவிடும் ஏற்பாடு பாதுகாப்புத்தரப்புக்கு இருந்ததாம்.

இந்த தகவல் கொழும்பிலுள்ள மேற்குலக இராஜதந்திரி அம்மையார் ஒருவரின் காதுகளுக்கு சென்றது. அவர் உடனடியாக அரச மேலிடத்து தலைவர் ஒருவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டார். சர்வதேச நாணய நிதியத்திடம் உதவிகேட்டு பேச்சு நடக்கும் வேளையில் இப்படியான ஏற்பாடுகளை செய்வது தவறு.. என்று கூறினாராம் அந்த தூதுவர் அம்மையார்.

அதன் பின்னரே பொலிஸ் வாகனங்கள் உடனடியாக அங்கிருந்து அகற்றப்பட்டனவாம். அரச மேல்மட்டத் தலைவர் ஒருவரே இந்த தகவலை எம்முடன் பகிர்ந்துகொண்டார்.

### அரசியலமைப்பின்படி ...

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. முன்னாள் அமைச்சர்களை நேற்றுமுன்தினம் கோட்டையிலுள்ள ஜனாதிபதி உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் சந்தித்துப் பேசியபோது இவ்வாறு தெரிவித்துள்ள கோட்டாபய, அரசமைப்பை பின்பற்றியே தாம் செயற்படுவாரென்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த காலங்களில் சிறப்பாக செயற்பட்ட இளவயது இராஜாங்க அமைச்சர்கள் அமைச்சர்களாக நியமிக்கப்படுவது குறித்து இங்கு பேசப்பட்டுள்ளது.

இதனை முன்னாள் அமைச்சர்கள் சிலர் வரவேற்றுள்ள அதேசமயம் இதனால் கட்சிக்குள் புதிய நெருக்கடிகள் ஏற்படலாமென்று வேறு சிலர் எச்சரித்துள்ளனர்.

அதேசமயம் ஆட்சி அதிகாரம் நிலைப்பதற்கு பதவிகளை பொறுப்பேற்காதிருக்க முடிவு செய்த முன்னாள் அமைச்சர்கள் பலர் இந்த கூட்டத்தின்போதும் அதனை ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளனர். பிரசன்ன ரணதுங்க, பவித்ரா, காமினி லொக்குகே, பந்துல குணவர்தன, மஹிந்தானந்த ஆகியோர் இதனைத் தெரிவித்துள்ளனர்.

அதேபோல தமக்கு எந்த பொறுப்புகளையும் வழங்கவேண்டாமென முன்னாள் அமைச்சர் சமல் ராஜபக்ஷ இங்கு தெரிவித்துள்ளார். புதிய அமைச்சரவையில் சமல், பெசில், நாமல், சஷீந்திர ஆகிய ராஜபக்ஷக்களுக்கு அமைச்சுப்பதவிகள் வழங்கப்படமாட்டாதென இங்கு கோடி கட்டப்பட்டது.

ஜனாதிபதியோ அல்லது பிரதமரோ அரசியலமைப்பின்படி தமது பதவிகளை தொடரவேண்டுமென இங்கு முன்னாள் அமைச்சர்களால் வலியுறுத்தப்பட்டது.

அரசியலமைப்பின்பிரகாரம் தமக்கு வழங்கப்பட்டுள்ள பதவிக் காலத்தினை தொடரப்போவதாக இதன்போது குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி, குறைந்த எண்ணிக்கை உறுப்பினர்களை கொண்ட அமைச்சரவையை நியமிப்பதாக அறிவித்துள்ளார்.

### கண்டியிலிருந்து...

அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை சபாநாயகரிடம் விரைவில் சமர்ப்பிக்க ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு தீர்மானித்துள்ளது.

பல நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்துடன் எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வில் அதனை கையளிக்க நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

இதேவேளை அரசாங்கத்தின் மக்கள் விரோத செயற்பாடுகளுக்கு எதிராக, கண்டியில் இருந்து கொழும்புவரை நடைப் பயணப் போராட்டத்தை ஏற்பாடுசெய்வது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

24ஆம் திகதி கண்டியில் ஆரம்பமாகும் குறித்த நடைப் பயணப் போராட்டம் மே முதலாம் திகதி கொழும்பை வந்தடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு பலம் கொடுப்பதே நடைப் பயணப் போராட்டத்தின் நோக்கம் என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

### காலிமுகத்திடல்....

ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தை பதவி விலகுமாறு வலியுறுத்தி காலிமுகத்திடலில் போராட்டம் நடத்தப்படும் இடத்திற்கு உணவு உட்பட அத்தியாவசிய பொருட்களை பெருமளவில் விநியோகிக்கும் நபர்களை கண்டறிய குற்றவியல் விசாரணை திணைக்களம் நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளதாக தெரிய வருகிறது.

இதனடிப்படையில் அண்மையில் போராட்டக்காரர்களுக்கு பிரியாணியை விநியோகித்ததாக கூறப்படும் கனேடிய கடவுச்சீட்டை கொண்டுள்ள அரவிந்தன் ராசநாயகம் என்பவரை குற்றவியல் விசாரணைத் திணைக்களம் தேடி வருவதாக கூறப்படுகிறது.

தனது துணைவியின் வழியாக அவர் கடந்த 2021ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்துள்ளதாகவும் 2019 மற்றும் 2020ஆம் ஆண்டு காலத்தில் நடந்ததாக கூறப்படும் பணச் சலவை சம்பந்தமான குற்றச்சாட்டு தொடர்பில் அவருக்கு எதிராக சர்வதேச பொலிஸார் பிடியாணை பிறப்பித்துள்ளதாக பேசப்படுகிறது.

இந்த விடயத்தை அடிப்படையாகக் கொண்டு சம்பந்தப்பட்ட நபரை கைதுசெய்ய குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தினர் தயாராகி வருகின்றனர். எது எப்படி இருந்தபோதிலும் தமது எதிர்ப்பு போராட்டத்தை சீர்குலைக்கும் திட்டமாகப் போராட்டக் களத்திற்கு கிடைத்துவரும் விநியோகத்தை நிறுத்தவும் மக்களை அச்சுறுத்தும் உள்நோக்கத்திலும் அரசாங்கம் இதனை மேற்கொண்டுள்ளதாக சந்தேகம் ஏற்பட்டுள்ளது என போராட்டக் களத்தில் உள்ள அதன் ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

### பாடசாலைக் கற்றல் நேர...

பாடசாலை நேரத்தை ஒரு மணித்தியாலமாக நீடிப்பது தொடர்பான தீர்மானம் தற்காலிகமாக கைவிடப்படுவதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

2022ஆம் ஆண்டிற்கான முதலாம் தவணைக்கான பாடசாலை கற்றல் செயற்பாடுகள் இன்றைய தினம் ஆரம்பமாகவுள்ளன.

இன்றுமுதல் பாடசாலை நேரம் ஒரு மணித்தியாலம் நீடிக்கப்படுவதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் தற்போது அந்த தீர்மானம் தற்காலிகமாக கைவிடப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுடன் தொடர்புடைய பாடத் திட்டங்களை உள்ளடக்குவதற்கு 139 நாட்கள் வரையறுக்கப்பட்ட கால அவகாசம் காணப்படுவதால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன் பாடசாலை நேரத்தை ஒரு மணித்தியாலம் வரை நீட்டிப்பதன்மூலம் கற்பித்தலுக்கான காலத்தை கூடுதலாக வழங்க முடியும் எனவும் எதிர்பார்க்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

### அமைதியான போராட்டங்கள்...

அதிகாரங்களையும் பயன்படுத்தப் போவதில்லை என பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரட்ன தெரிவித்துள்ளார். ஜனநாயக ரீதியில் அமைதியான முறையில் நடத்தப்படும் போராட்டங்களை ஒடுக்குவதற்கும் அடக்குவதற்கும் இராணுவத்தை ஈடுபடுத்தப் போவதில்லை என பாதுகாப்பு அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

இதேவேளை இலங்கை இராணுவம் வன்முறையை ஏற்படுத்த தயாராகி வருவதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சிவில் மக்களை அடக்குவதற்கு திட்டமிடுவதாகவும் சிவில் சமூக அமைப்புகள் மற்றும் நபர்கள் சுமத்தும் குற்றச்சாட்டை முற்றாக நிராகரிப்பதாகவும் பொய்யான செய்திகளை நம்பி ஏமாறவேண்டாம் எனவும் இராணுவம் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழன் வாசகர்களே!
தமிழன் இணையத்தளத்தில்
வெளியாகும் செய்திகளை
www.thamilan.lk
ஊடாக மாத்திரமின்றி
www.thamilannews.com
மூலமாகவும் உடனுக்குடன்
அறிந்துகொள்ளலாம்
தமிழன் தமிழன்




தமிழன் தமிழன் ஜூனியர்
கொழும்பு 01
முதல் 15 வரையிலான
பகுதிகளில் தமிழன்
(தினசரி, வாரஇதழ்),
ஜூனியர் பத்திரிகை
வீடுகளுக்கே விநியோகம்
செய்யப்படும்.
தொடர்பு - சந்திரகுமார்
0777983308

மரண அறிவித்தல்,
நினைவஞ்சலி,
மற்றும் பிறந்தநாள்
விளம்பரங்களை
குறைந்த கட்டணத்தில்
பிரசுரிக்க
வெறும் 1000/=
மட்டுமே...
அழையுங்கள்
0761393805

# அரசாங்கத்துக்கும் எதிரணிக்கும் ஏற்புடைய புதிய பிரதமரின் இடைக்கால நிர்வாகம்

## அவசரத்தேவை என்கிறது தேசிய சமாதானப் பேரவை

நாடுபூராகவும் மக்களின் ஆர்ப்பாட்டங்களில் வெளிப்படுத்தப்படுகின்ற கோரிக்கைகளும் சுலோகங்களும் அரசாங்கத்திடமிருந்து மக்களின் ஆணை வாபஸ் பெறப்படுகின்றது என்பதையே உணர்த்திநிற்கிறது. அதனால் அரசாங்கத்துக்கும் எதிரணிக்கும் ஏற்புடைய புதிய பிரதமரின் கீழான இடைக்கால அரசாங்கம் ஒன்று அமைக்கப்படவேண்டியதே அவசரத் தேவையாகும் - என்று கலாநிதி ஜெகான் பெரேராவை நிறைவேற்றுப் பணிப்பாளராகக் கொண்ட தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்தியிருக்கிறது.

இது தொடர்பில் சமாதானப் பேரவை விடுத்திருக்கும் அறிக்கையின முழு விபரம் வருமாறு,

வெளிநாட்டுக் கடன்களை திருப்பிச் செலுத்துவதை தற்காலிகமாக நிறுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொண்ட தீர்மானம் நாடு வங்குரோத்து நிலையை அடைந்துவிட்டதாக பிரகடனப்படுத்துவதற்கு சமனானதாகும்.

இது நாட்டின் பொருளாதாரத்துக்கும் நம்பகத்தன்மைக்கும் இன்னொரு பாரிய தாக்கமாகும். தாங்கள் அனுபவிக்கின்ற பொருளாதார இடர்பாடுகளுக்கு எதிராக நாட்டின் சகல பாகங்களிலும் மக்கள் தன்னியல்பாக மாபெரும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருக்கின்ற ஒரு தருணத்தில் இவ்வாறு நேர்ந்திருக்கிறது.

இரு வாரங்களுக்கு முன்னர் அமைச்சரவை பதவிவிலகியமையும் புதியதொரு அமைச்சரவையை நியமிப்பதிலுள்ள இயலாமையும் அரசாங்கம் செயலிழந்துவிட்டதன் அறிகுறியாகும். இதுநாட்டுக்கு பெரும் பாதகமான ஒரு நிலைவரமாகும்.

மக்களின் வீதிப்போராட்டங்கள் இடைவிடாமல் தொடர்ந்தவண்ணமே இருக்கின்றன. பாரம்பரியமாக குடும்பங்களுடன் கொண்டாடுவதற்கும் மத அனுஷ்டானங்களில் ஈடுபடுவதற்கும் அர்ப்பணிக்கப்படுகின்ற புத்தாண்டு தினங்களில் கூட ஆர்ப்பாட்டங்கள் ஓயவில்லை. இது அரசாங்கத்திடமிருந்து மக்களின் ஆணை வாபஸ்பெறப்படுவதன் ஒரு வெகுஜன வெளிப்பாடாகும். கொழும்பிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் ஆர்ப்பாட்டங்களில் வெளிப்படுத்தப்படுகின்ற சுலோகங்கள் ஜனாதிபதியும் அரசாங்கமும் ஆட்சி செய்வதற்கான ஆணையை இழந்துவிட்டார்கள் என்பதையும் அவர்கள் பதவி விலகவேணடும் என்பதையுமே செய்தியாக சொல்கின்றன. இந்த உணர்வுகள் இன, மத பேதங்களுக்கப்பால் மக்களை ஐக்கியப்படுத்துகின்ற ஒரு வெகுஜன இயக்கத்தை தோற்றுவித்திருக்கின்றன.

அரசியலமைப்பின் ஏற்பாடுகளின்கீழ் செயற்படுகின்ற ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் எம்மைச் சூழ்ந்திருக்கின்ற இடர்பாடுகளிலிருந்து நாட்டை மீட்டெடுக்க ஒன்றிணைந்து வழிமுறைகளைக் காண வேண்டியது அவர்களது பொறுப்பு என்று தேசிய சமாதானப் பேரவை நம்புகிறது. அரசாங்கத்திற்குள் நிலவும் ஊழலும் பொறுப்புக்கூறும் கடப்பாடின்மையுமே மக்களின் போராட்டங்களின் முக்கிய கவனத்துக்குரியவையாக இருக்கின்றன. அன்றாடம் வலுப்பெற்று வருகின்ற மக்களின் அபிலாஷைகளுக்கு செவிமடுத்து நம்பகத்தன்மையையும் கண்ணியத்தையும் மீள நிலைநிறுத்துமாறு குறிப்பாக, அரசாங்கத்தின் தலைமைத்துவத்தை நாம் கோருகிறோம். தற்போது மக்களால் வெளிப்படுத்தப்படுகின்ற கோரிக்கைகளின் உணர்வுகளை நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

அதனால், ஜனாதிபதி பதவியிடம் மிதமிஞ்சிய அதிகாரங்களைக் குவிக்கின்றதும் பொறுப்புக்கூறும் கடப்பாட்டையும் வெளிப்படைத்தன்மையையும் உறுதிசெய்கிற அரச நிறுவனங்களின் சுதந்திரத்தை அரித்துச் செல்கின்றதுமான அரசியலமைப்புக்கான 20ஆவது திருத்தத்தை இரத்துச்செய்யவேண்டும் என்று நாம் கோருகின்றோம். அதிகாரங்கள் குறைக்கப்பட்ட ஜனாதிபதி பதவியும் அரசாங்கத்துக்கும் எதிரணிக்கும் ஏற்புடைய புதிய பிரதமரின் கீழான ஓர் இடைக்கால அரசாங்கம் ஒன்றே இன்றைய அவசரத்தேவையாகும்.

புதிய முகங்களுடனான அத்தகைய இடைக்கால அரசாங்கம் ஒன்றினால் பொருளாதாரத்தை முடக்கநிலையிலிருந்து எழுப்பிவிடத் தேவையான குறுகியகால நிதியுதவிக்கு சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோளை விடுக்கக்கூடியதாக இருக்கும். எர்பொருள், சமையல் எரிவாயு, மின்சாரம், மருந்து வகைகள் மற்றும் அத்தியாவசிய பாவனைப்பொருட்களை பொதுமக்களுக்கு விநியோகிப்பதில் உடனடிக் கவனம் செலுத்தப்படவேண்டும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.






நாட்டில் 74 வருட சாபக்கேட்டுக்கு முற்றுப்புள்ளி வைப்போம் எனும் தொனிப்பொருளில் மக்கள் விடுதலை முன்னணியினால் ஏற்பாடு செய்யப்பட்ட பேரணி பேருவளையில் நேற்று ஆரம்பமானது. பெருந்திரளான மக்கள் அதில் கலந்துகொண்டிருந்தனர்.



உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் இடம்பெற்று மூன்று வருட பூர்த்தியாகின்ற நிலையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதிக் கோரி கொழும்பின் பல்வேறு பிரதேசங்களில் நூதன முறையில் ஆர்ப்பாட்டமொன்று நேற்று (17) முன்னெடுக்கப்பட்டிருந்தது.

# பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு இடமாற்றம்

**(யாழ். செய்தியாளர்)**

வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜெகத் பளிஹக்காரவுக்கு உடன் நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.



அந்த வெற்றிடத்துக்கு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா ஜெயந்த வீரசூரிய இடமாற்றப்பட்டுள்ளார்.

அதனடிப்படையில் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜெகத் பளிஹக்கார சமூக பொலிஸ் பிரிவுக்கு பொறுப்பாக செல்லவுள்ளதுடன், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜெயந்த வீரசூரிய, வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# சிங்கள ஆட்சியாளர்களின் தவறான முடிவுகளால் தமிழர்களும் அழிந்துபோவதை ஏற்கமுடியாது

## வடமாகாண முன்னாள் உறுப்பினர் ரவிகரன் தெரிவிப்பு

**(விஜயரத்தினம் சரவணன்)**

சிங்கள ஆட்சியாளர்களின் தவறான முடிவுகளால் தமிழர்களும் அழிந்துபோவதை ஏற்கமுடியாது - என வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

தமிழர்களின் தன்னாட்சி உரிமை அங்கீகரிக்கப் படுகின்றபோது, தமிழர்கள் தம்மைச் சக்தி வாய்ந்த இனமாக நிறுவிக் காட்டுவர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையின் தற்போதைய நெருக்கடி சூழலில், தமிழர்களின் நிலைபற்றி ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையின் ஆட்சியாளர்களால் தற்போது ஏற்பட்டிருக்கும் மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள முடியவில்லை.

தென்னிலங்கை மக்கள், தம் மீது அழுத்தப்படும் பொருண்மிய சுமையால் சீற்றம் கொண்டு ஆட்சியாளர்களுக்கு எதிராக தமது உணர்வுகளை வெளிப்படுத்தி வருகிறார்கள்.

தென்னிலங்கை ஆட்சியாளர்களின் இயலாமை தற்போது வெளிப்படையாகத் தெரிகின்றது. இவர்களின் திறன் இன்மையால்



விளைந்த பொருண்மிய நெருக்கடி தற்போது தமிழர்களையும் கடுமையாக பாதிக்கின்றது

நமக்குரிய சுயநிர்ணய உரிமையை, தன்னாட்சியை, உலகம் அங்கீகரிக்க வேண்டிய காலம் இது. சிங்கள ஆட்சியாளர்களின் தவறான முடிவுகளால் தமிழர்களும் அழிந்துபோவதை ஏற்க முடியாது.

புலம்பெயர் உறவுகளோடும், எமக்கு ஆதரவான சர்வதேச ஆற்றல்களோடும் சேர்ந்து தமிழர்கள் எம்மால், எம்மை வலுவான திறன் வாய்ந்த சக்தியாக நிறுவ முடியும் - எனத் தெரிவித்தார்.

# நாடு முழுவதும் இன்று நான்கு மணிநேர மின்வெட்டு

மின் உற்பத்திக்கு தேவையான எரிபொருள் மற்றும் நீர் இன்மையினால் இன்று (18) சகல வலயங்களிலும் நான்கு மணிநேரமும் 20 நிமிடங்களுக்கும் மின் துண்டிப்பு மேற்கொள்ளவுள்ளதாக மின்சார சபை நேற்று (17) அறிவித்தது.

“ஏ” தொடக்கம் “டபிள்யூ” வரையிலான 20 வலயங்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரையான காலப்பகுதியில் மதிய நேரத்தில் இடைக்கிடை மூன்று மணி நேரமும், மாலை 6.00 மணிமுதல் இரவு 10.00 மணிவரையான காலப்பகுதியில் ஒரு மணிநேரமும் 20 நிமிடங்களுக்கு மின் துண்டிப்பு மேற்கொள்ளப்படும் எனவும் மின்சார சபை அறிவித்துள்ளது.





தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு எண்ணெய் தேய்க்கும் நிகழ்வு நேற்று (17) கோட்டை ரஜமகா விகாரையில் இடம்பெற்றது. (படப்பிடிப்பு – லலித் பெரேரா)



தமிழன்
THAMILAN தமிலன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஏப்ரல் 18ஆம் திகதி, திங்கட்கிழமை

# பங்குச்சந்தை மூடல் சரிதானா?

இலங்கைக்குப் பயணம் செய்யத் தயாராக இருக்கும் மற்றும் இலங்கையில் தங்கி இருக்கும் வெளிநாட்டவர் அச்சமடையும் நிலை எழுந்துள்ளது.

உலகமே உற்று நோக்கும் விடயமாக இலங்கையின் பொருளாதார நெருக்கடி உருவாகியுள்ளது. அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு, பொதுமக்களின் தன்னெழுச்சிப் போராட்டம் என இலங்கையில் பரபரப்பான சூழல் நிலவுகிறது.

பொருளாதார நெருக்கடியில் சிக்கியதற்கு பல்வேறு பிரச்சினைகள் முக்கிய காரணிகளாக உள்ளன. கொரோனா பாதிப்பால் வந்த ஊரடங்கு, வேலையிழப்பு, வெளிநாட்டுக் கடன் அதிகரிப்பு, பணவீக்கம், அந்நிய செலாவணி கையிருப்பு குறைந்தமை, எரிபொருள் பற்றாக்குறை உள்ளிட்டவைதான் முக்கிய காரணமாக கூறப்படுகின்றன. இதனால்தான் பொதுமக்கள் வீதிகளில் இறங்கிப் போராடி வருகின்றனர்.

குறிப்பாக கொரோனாவின் 2 ஆண்டு காலம் என்பது இலங்கையை மோசமான நிலைமைக்குத் தள்ளிவிட்டுள்ளது. 2021 நிதியாண்டின் நான்காம் காலாண்டில் இலங்கையின் பொருளாதாரம் எதிர்பார்த்ததை விட 1.8 சதவீதம் மெதுவாக வளர்ச்சியடைந்தது. அந்த ஆண்டில் பொருளாதார வளர்சி என்பது 3.7 சதவீதமாக மட்டுமே இருந்தது.

மேலும், கொரோனா பரவலால் கடந்த 2 ஆண்டுகளில், நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பு 70 சதவீதம் சரிந்து பெப்ரவரி மாத நிலைவரத்தின்படி சுமார் 2.31 பில்லியன் டொலராக உள்ளது. இது கடன் செலுத்த வேண்டியதை விட மிகவும் குறைவாக உள்ளது. இதனால், உணவு மற்றும் எரிபொருள் உட்பட அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு பணம் செலுத்த முடியாமல் திணறிக்கொண்டிருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

சுற்றுலாத் துறையை சார்ந்திருக்கும் இலங்கையில் கடந்த 2 ஆண்டுகளாக கொரோனா முடக்கம் காரணமாக ஏராளமானோர் வேலையிழந்தனர். இதனால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர். நாட்டில் ஏழைகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது.

மக்கள் பெற்றோல், டீசல், எரிவாயு சிலிண்டர், மண்ணெண்ணெய் ஆகியவற்றை நீண்ட வரிசையில் நின்று பெற்று வருகின்றனர். அதிக விலைக்கு விற்பனை செய்தாலும் கூட அத்தியாவசியத் தேவைகளுக்காக அதனைத் தவிர்க்காமல் வாங்கவே முயற்சிக்கின்றனர். இருப்பினும், கடும் தட்டுப்பாடு நிலவுகிறது. இதற்கிடையே ரஷ்யா - உக்ரைன் இடையேயான மோதல் போக்கால் மசகு எண்ணெய் விலைகள் உயர்ந்துள்ளன. இதுவும் இலங்கைக்கு தற்போது தலைவலியாக உள்ளது.

இலங்கையில் வெளிநாட்டு கடன்கள் அதிகரித்துள்ளன. 51 பில்லியன் டொலர் வெளிநாட்டு கடன்களைச் செலுத்துவதற்கு தேவையான நடவடிக்கை என மார்ச் 2020இல், நாட்டில் இறக்குமதித்தடை விதிக்கப்பட்டது. இது அத்தியாவசியப் பொருட்களின் பரவலான தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வுக்கு வழிவகுத்தது. மேலும் 2022 பெப்ரவரியில் 15.1 சதவீதமாக இருந்த பணவீக்கம் 2022 மார்ச்சில் 18.8 சதவீதமாக உயர்ந்துள்ளது. உணவு பணவீக்கம் பெப்ரவரியில் 25.7 சதவீதத்தை எட்டியது. இது ஒரு தசாப்தத்தில் இல்லாத அளவுக்கு அதிகமாகும்.

இவ்வாறான பின்னணியில் இலங்கையானது உத்தியோகப்பற்றற்ற ரீதியில் வங்குரோத்து நாடாக அறிவிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டுக்கடன்கள் மீள் செலுத்துவதையே சில காலங்களுக்கு ஒத்திவைத்துள்ளது இலங்கை மத்திய வங்கி. பொருளாதாரத்தில் பின்னடைவு இருந்தாலும் அதனை சமாளிக்கலாமென அரசாங்கமே தன்னம்பிக்கையுடன் இருக்கும்போது, பங்குச்சந்தையை ஒரு வாரத்திற்கு மூடுவதென்பது சரியான தீர்மானமல்ல.

பங்குச்சந்தை மூடப்படுவதற்கு சரியான பொருளாதாரக் காரணங்களை எவராவது சொல்லக்கூடும். ஆனால், பொத்தாம்பொதுவாக நோக்கினால், அதுவும் இப்போதைய நாட்டு நிலைமையுடன் ஒப்பிட்டால் பங்குச்சந்தை தற்காலிக மூடல் என்பது பிழையான நேரத்தில் எடுக்கப்பட்ட பிழையான முடிவாகும்.

ஏப்ரல் 18 ஆம் திகதியான இன்று முதல் ஐந்து வணிக நாட்களுக்கு கொழும்பு பங்குச்சந்தையை தற்காலிகமாக மூடுமாறு இலங்கை பங்குப் பரிவர்த்தனை ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது.

ஆணைக்குழுவின் இயக்குனர் துசார ஜயரத்ன, இது தொடர்பில் ஏப்ரல் 15ஆம் திகதி பணிப்பாளர் சபைக்கு இதற்கான அறிவித்தலை விடுத்துள்ளார்.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையைக் காரணம் காட்டியே பங்குச்சந்தையை தற்காலிகமாக மூடுமாறு அவர் உத்தரவிட்டுள்ளார்.

பங்குதாரர்களும், தொடர்புடைய தரப்பினரும் விடுத்த வேண்டுகோளை பரிசீலித்த பின்னரே இந்த முடிவை மேற்கொண்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேசமயம் ,கொழும்பு பங்குச்சந்தையின் செயற்பாடுகள் இன்று முதல் ஒரு வாரத்துக்கு (22ஆம் திகதி வரை) மூடப்படுகின்ற அறிவிப்பு, அந்த பங்குச்சந்தை வங்குரோத்தாகிவிட்டதென வெளியிடப்பட்டுள்ள அறிவிப்புக்கு சமனானதாகும் என்று விமர்சனம் வெளியிடப்பட்டுள்ளது

வெளிநாட்டுக் கடன் பொறுப்புகளை தற்காலிகமாக திருப்பிச் செலுத்தப்போவதில்லை என்று இலங்கை கடந்த வாரம் அறிவித்ததன் காரணமாக சர்வதேச சமூகத்தின் மத்தியில் இலங்கை தொடர்பான நம்பிக்கையில் பாரிய அடி வீழ்ந்ததாக பொருளியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

இந்நிலையில், கொழும்பு பங்குச்சந்தை ஒரு வாரத்துக்கு மூடப்படுகின்றமையானது, சர்வதேச பார்வையில் நாட்டின் நம்பிக்கைக்கு மற்றொரு பெரிய அடியாகும் என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பேராசிரியர் சிறிமல் அபேரத்ன கூறியுள்ளார். இதன் பொருள், வணிகத்திலும் இலங்கைக்கு நெருக்கடி உள்ளதைக் குறிப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் நிலவும் அரசியல் ஸ்திரமின்மை மற்றும் பொருளாதார நிச்சயமற்ற தன்மை காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை பங்குப் பரிவர்த்தனை ஆணைக்குழு கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்தது.

முதலீட்டாளர்கள் மற்றும் பிற சந்தைப் பங்கேற்பாளர்களின் கருத்துப்படியே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக ஆணைக்குழு தெரிவித்திருந்தது. எனினும், சில பங்குதாரர்கள் இந்தக் கருத்தை மறுத்தனர்.

மூலதன சந்தை பங்குதாரர்களுடன் கலந்தாலோசிக்காமல் இந்த முடக்கல் முடிவு எடுக்கப்பட்டதாக அவர்கள் கூறியுள்ளனர். இது நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலையில், எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றும் செயலாகும் என்பதே அவர்களின் கருத்து.

இலங்கையில் பொருளாதாரம் மோசடைந்து வருவதாகவும், பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டில் எந்த நேரத்திலும் மருந்து, எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படலாம் எனவும் பல நாடுகள் தங்களது பிரஜைகளுக்கு பயண அறிவுறுத்தல் வழங்கியுள்ளன. இதனால்,

# கல்வியைப் போன்றே கலைகளும் முக்கியம்!

ஒரு மனிதன் அதிகபட்சம் எத்தனை வருடங்கள் வாழ்ந்துவிட முடியும்? அறுபது? எழுபது? எண்பது? எத்தனை வருடங்கள் வாழ்ந்தாலும் ஒரு வாழ்க்கையைத்தான் அவனால் வாழ முடியும். ஆனால், கலை, இலக்கியம் ஆகியவை அவனுக்கு ஓர் உடலுக்குள் இருந்து கொண்டு பல வாழ்க்கைகளை வாழ்ந்து பார்க்கும் சூழலை வழங்கும். கற்பனை வளத்தின் மூலம் ஒவ்வொரு மனிதனும் பல மடங்கு வாழ்க்கையை வாழ்வதாகவும், வாழ்க்கையின் இன்பங்களை இதன் மூலம் அதிகப்படுத்திக் கொள்வதாகவும் நம்பப்படுகிறது.

கலையும், இலக்கியமும் அகவெளிச்சம் ஏற்படுத்தவல்ல ஒரு மெய்யறிதல். இவை வாழ்வு குறித்து அவ்வப்போது ஏற்படும் சலிப்பைப் போக்கிக் கொள்ள நமக்கு பேருதவி செய்கின்றன. இறை உணர்வு மிக்கவர்கள் துன்பம் ஏற்படுகையில் 'கடவுள் மீது பாரத்தை போட்டுவிட்டு வேலையைப் பார்க்க வந்துவிட்டேன்' என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். இலக்கியமும், கலையும் கூட இதுபோன்ற மாயங்களை நமக்குள் ஏற்படுத்தும் வல்லமை கொண்டவை. ஆச்சரியப்படுத்தும் விதமாக பக்குவப்பட்ட மனதை நமக்குப் பரிசளிக்கும்.

சென்ற வாரம் விழா ஒன்றில் கலந்துகொள்ள நேர்ந்தது. அங்கு வந்திருந்த என் உறவினர் ஒருவர் என்னிடம், 'உலகம் போகிற போக்குக்கு இந்த இலக்கியம் எல்லாம் தேவையா? இந்த இலக்கியத்தால் உக்ரைன் - ரஷ்யா போரை என்ன செய்ய முடிந்தது? இன்று எண்ணற்றவர்கள் கதை, கவிதைகளை எழுதிக் குவிக்கிறார்கள். அவற்றைப் படித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தால் அடுத்த வேளை உணவுக்கு என்ன செய்வது? இலக்கியம் சோறு போடுமா அல்லது நாம் கஷ்டப்படும்போது நமக்குப் பண உதவி செய்யுமா?' எனக் கேட்டார்.

மொட்டைத்தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சுப் போட்ட கதையாக இருந்தது அவரது கேள்வி. உதாரணமாக, ரோம் நகரம் தீப்பற்றி எரிந்தபோது நீரோ மன்னன் பிடில் வாசித்ததை முன்னிறுத்தும் போது அவன் கொடுங்கோலன் என்பதை உணரவேண்டுமேயன்றி அவன் அந்நேரம் கலைக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்தான் என்று புரிந்துகொள்ளக் கூடாது. ஆனால், பல நேரங்களில் அவ்வாறுதான் புரிந்து கொள்ளப்படுகிறது.

இலக்கியத்தையே உயிர் மூச்சாகக் கொண்டவர்களுக்கு அது இன்றும் நல்ல வாழ்வாதாரத்தை அளிக்கிறது. அதையும் தாண்டி தனிப்பட்ட மனிதனின் வாழ்வை அர்த்தமுள்ளதாக்குகிறது. கலை இலக்கியப் பெருவெளிக்குள்ளேயே குடும்பம் நடத்தும் ஒரு கலைஞனுக்கு அங்கீகாரம் கிடைத்தாலும், கிடைக்காமல் போனாலும் அவன் மனதளவில் ஒரு மேம்பட்ட வாழ்க்கையையே வாழ்கிறான். அது அம்மனிதனின் கையைப் பிடித்து உயரத்துக்கு அவனை அழைத்துச் சென்றுவிடும்.

வாழ்க்கையை ரசித்து வாழ, இன்ப-துன்பம் எது வந்தாலும் அதன் போக்கில் விட்டுப் பிடிக்க நமக்குக் கை கொடுக்கிறது இலக்கியம். மொத்தத்தில் ஓர் உயிர்ப்பான வாழ்க்கையை வாழ இலக்கியம் உதவும். அந்த உயிரோட்டம் நம் நாடி நரம்புகளில் நித்தம் பிரதிபலித்துக் கொண்டேயிருக்கும்.

அதை நாம் எப்படி அறிவது? ஜேர்மனியின் நாசி கட்சிக்கு எதிரான போரை பிரான்ஸ் தொடங்கிய நேரம் அது. ஒலிவர் மெஸ்ஸியன் என்னும் 31 வயது இசையமைப்பாளரை ஜெர்மானியர்கள் 1940இல் கைதுசெய்து போர்க்கைதிகள் முகாமில் சிறை வைத்தனர்.

நாசி முகாம்கள் வதைமுகாம்கள் என்பது உலகத்துக்கே தெரியும். கைதுசெய்யப்பட்டவர்கள் அனைவரையும் ஒரே இடத்தில் அடைத்து வைத்து, துப்பாக்கியால் சுட்டோ, நச்சுப்புகை செலுத்தியோ கொன்று குவித்தனர். ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான யூதர்களைக் கொல்ல விஷவாயு அறைகள் ஏற்படுத்தப்பட்டன.

இந்த நாசி போர் முகாம்களில் பணம் இல்லை. எந்த நம்பிக்கையும் இல்லை. வியாபாரம் ஏதும் இல்லை. எவ்வித பொழுதுபோக்கும் இல்லை. ஏன், மனிதருக்கான அடிப்படை மரியாதை கூட இல்லை. இவ்வளவு 'இல்லை'கள் இருந்தும் அவர்கள் நாளைய தினத்தை நம்பிக்கையுடன் எதிர்கொள்ள கலையும், இலக்கியமும் அவர்களுக்குக் கைகொடுத்தன.

ஒலிவர் மெஸ்ஸியன் என்பவர், தன்னுடன் மூன்று கலைஞர்களை சேர்த்துக்கொண்டு 'குவார்டட்' (நான்கு கருவிகளை கொண்டு உருவாக்கப்படும் இசை) என்னும் நால்வர் பாடலை இயற்றினார். அவர்கள் பயிற்சி செய்த அந்த இசை வடிவம்தான் தினம் தினம் பலருக்கு நம்பிக்கையை நெஞ்சில் நிலைக்கச் செய்தது.

1941 ஜனவரியில் 4000 போர்க் கைதிகள், சிறைக் காவலர்கள் முன்னிலையில் அந்த நிகழ்ச்சி போர்க்கைதிகள் முகாமிலேயே நிகழ்த்திக் காட்டப்பட்டது. இன்றும் இசை உலகில் மிகப் புகழ்பெற்ற படைப்பாக அது திகழ்கிறது. இப்படிப்பட்ட சித்திரவதைக் கூடத்தில் உணவும் நீரும் பெறுவதற்கும், சிறை அதிகாரி, காவலர்களின் கொடுமையில் இருந்து தப்பிப்பதற்குமே ஆற்றல் போதாதபோது ஒருவர் ஏன் கலையைப் பற்றிக்கொண்டிருக்க வேண்டும்? இசையுடன் கலந்த அந்த பாடல் வரிகள் ஏற்படுத்திய தாக்கம் ஒட்டுமொத்த சிறைக்கைதிகளுக்கும் மனதில் நம்பிக்கையைத் தந்தது.

உயிர் வாழ்ந்தால் போதும் என்ற எண்ணத்தை மட்டும் மனதில் வைத்துக் கொண்டு வாழ்ந்த அந்த வதை முகாமில் கூட கலை என்பது வாழ்க்கைக்கு மிகவும் முக்கியமானதாக இருந்திருக்கிறது. "கதை, கவிதை எல்லாம் எனக்கு அடுத்தவேளை சோறு போடுமா?" என்று என்னிடம் கேட்ட அந்த உறவினருக்கு, அதையும் தாண்டி மனித மனதில் வாழ்வதற்கான நம்பிக்கையை விதைக்கும் என்ற இந்த நிகழ்வை நான் பதிலாக உரைத்தபோது அவர் முகத்தில் சற்றே தெளிவு ஏற்பட்டது.

2001இல் அமெரிக்காவின் இரட்டை கோபுரங்கள் மீது தீவிரவாதிகள் விமானங்களை மோதச் செய்து அவற்றைத் தரைமட்டமாக்கினர். ஒரே நாளில் நாட்டின் பொருளாதாரமே பெரிய கேள்விக்குறியாக மாறிவிட்ட அவலத்தை எண்ணி அமெரிக்க மக்கள் பெரும் துயருற்றனர். அன்றைய நிகழ்வில் இறந்தவர்களின் உடலை சுற்றிலும் நின்று கொண்டு ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்தும் வாசகங்களையும், பாடலையும் குழுவாகப் பாடினர்.

மக்களின் துயரத்தை வெளிப்படுத்தும் இசை நிகழ்ச்சி பொது நிகழ்ச்சியாக அங்கு நடத்தப்பட்டது. இசையையும், இலக்கியத்தையும் துணைகொண்டு அமெரிக்கர்கள் அவ்வளவு பெரிய துயரத்திலிருந்து விரைவில் மீண்டனர்.

கலையும், இலக்கியமும் வாழ்வில் நமக்கு ஏற்படும் மேடுபள்ளங்களை நிரப்பும் கூழாங்கற்கள். வாழ்வின் நினைவுகளை ரசிக்கும் மனநிலையை ஏற்படுத்தும் ஒரு சாரல் மழை. கல்வியைப் போன்றே கலைகளும் மிகவும் முக்கியம். இதில் அவரவர் ஆர்வம் வேறுபடலாம். இன்னமும் நாம் கலை இலக்கியத்திற்கு என்று தினசரிகளில் தனியாக பக்கத்தை ஒதுக்கும் காலகட்டத்தில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

மக்கள் வெள்ளத்தில் நீந்தி நீந்தி பணிசெய்யும் ஒரு பஸ் நடத்துநரின் வார்த்தைகளில் கூட மேன்மை சாதாரணமாக வெளிப்படுவதை நாம் காணலாம். வயதானவர்கள் பஸ்ஸில் பயணம் செய்யும்போது 'வயதான காலத்தில் வீட்டிலிருக்காமல் இங்கு வந்து உயிரை வாங்குது' எனச் சொல்லும் நடத்துனருக்கும், 'பாத்து பத்திரமாக ஏறுங்க பாட்டி' என அக்கறையோடு சொல்லும் நடத்துனருக்கும் உள்ள வித்தியாசமே மேம்போக்கான வாழ்வுக்கான பதிவாக சாட்சியம் சொல்கிறது. அதைக் கலை இலக்கியம் இன்னும் சற்றே உயர்த்தும்.

அதற்காக அனைவரும் இலக்கியத்திலும், கலையிலும் பெரிதாக பாண்டித்தியம் பெற்றிருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. போதுமான அளவு அதன் சாரத்தை உள்வாங்கியிருந்தாலே போதும். எவ்வித பணியிலும் உணர்வுபூர்வமாக, உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் சிறப்பாகப் பணிபுரிய இயலும்.

அது மட்டுமல்ல, கலை இலக்கியங்கள், நாம் அறம் சார்ந்த வாழ்க்கையை வாழ அடிகோலுகின்றன. குற்றங்கள் புரியாமல் வாழும் உயர்ந்த வாழ்விற்கும், இலக்கியத்திற்கும் தொடர்புண்டு. 'பிழையா நன்மொழி' என்று வாய்மையை நற்றிணை குறிப்பிடுகின்றது. இதற்கு மாறாக 'பொய்மொழிக் கொடுஞ்சொல்' என்று பொய்யைக் குறிப்பிடுகிறது. நிலம் பெயர்ந்தாலும் பொய்சொல்லக் கூடாது என்பது பல பாடல்களில் வற்புறுத்தப்பட்டுள்ளது.

இலக்கியங்கள் காட்டும் அறங்கள், ஒரு மனிதன் தனியாகவும், சமூக உறுப்பினராகவும் இயங்குவதற்கும், அவனது பண்புநலனை உருவாக்குவதற்கும் உதவும் விதிமுறைகள் எனலாம். தாம் சிந்திக்காமல் பிறர் சொல்ல அறியும் அறம் மூன்றாம் தரமானது. சிந்தித்து அறிந்து கொள்ளும் அறம் இரண்டாம் தரமானது. இயல்பாக அறியும் அறம் முதல் தரமானது. இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இயல்பான முதல் தரமான அறங்கள் எனலாம்.

இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியால், கலையும், இலக்கியமும் கூட அதிகமாக நம்மை வந்தடைகின்றன. கலை சார்ந்த கட்டமைப்புகள் இணையத்தில் கொட்டிக் கிடக்கின்றன. அத்துடன் எண்ணற்ற கதைசொல்லிகள் இலக்கியத்தை நம்மிடம் கொண்டு சேர்க்கக் கிளம்பியிருக்கிறார்கள். வரலாற்று நூல்கள், நாவல்கள், தன்னம்பிக்கை நூல்கள் எனப் பல நூல்கள் இன்று கேட்பதற்குக் கிடைக்கின்றன.

செயலி வழியிலும் அவர்களின் செயல்கள் நம்மை வந்தடைகின்றன. படிக்க நேரமில்லை என்று புலம்புபவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம். நடைபயின்றபடி, செடிகளுக்கு நீர் பாய்ச்சியபடி, துணி மடித்தபடி, பயணம் செய்தபடி கதைசொல்லிகள் தரும் இலக்கிய பானத்தை பருகுவதும் தனி சுகமாகத்தான் இருக்கிறது.

ஐந்துநாள் போட்டி, ஒருநாள் போட்டி, 20-20 ஆட்டம், ஐ.பி.எல். என கிரிக்கெட் விளையாட்டு பல பரிமாணங்களை எடுத்ததுபோன்று இன்று தொழில்நுட்பம் மூலம் கலையும், இலக்கியமும் பல்வேறு வடிவங்களை எடுக்கத் தொடங்கியுள்ளன. அவற்றைப் பயன்படுத்தி வாழ்வில் உயர்வோம்!

**பவித்ரா நந்தகுமார்,**
**எழுத்தாளர்.**

## நக்கல் நமசிவாயம்




## இன்றைய நாளில்...

- ★ 1835 – அவுஸ்திரேலியாவில் மெல்பேர்ன் நகரம் அமைக்கப்பட்டது.
- ★ 1897 – கிரேக்கத்திற்கும், உதுமானியப் பேரரசுக்கும் இடையே போர் மூண்டது.
- ★ 1912 – கடலில் மூழ்கிய டைட்டானிக் கப்பலில் உயிர் பிழைத்த 705 பேர் நியூயோர்க் வந்து சேர்ந்தனர்.
- ★ 1930 – பி.பி.சி. வானொலி தனது வழமையான மாலைச் செய்தியறிக்கையில் இந்நாளில் எந்தச் செய்திகளும் இல்லை என அறிவித்தது.
- ★ 1942 – இரண்டாம் உலகப் போர்: ஜப்பானின் டோக்கியோ, யோக்கோகாமா, கோபே, நகோயா ஆகிய நகரங்கள் மீது அமெரிக்கப் போர் விமானங்கள் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டன.
- ★ 1946 – அனைத்துலக நீதிமன்றம் முதல் தடவையாக நெதர்லாந்தின் டென் ஹேக் நகரில் கூடியது.
- ★ 1958 – இலங்கையில் பண்டா - செல்வா ஒப்பந்தம் முறிவடைந்தது.

## ஒருமுறை பயன்படுத்தும் பொருட்களுக்கு மாற்று!

ஒருமுறை பயன்படுத்திவிட்டு, தூக்கி எறியப்படும் பொருட்கள்தான் சுற்றுச்சூழல் மாசுபாட்டிற்கு முதல் காரணம். குளிர்பான உறிஞ்சு குழாய், காது சுத்தப்படுத்தும் கம்பி, இனிப்புப் பொருட்களில் வைக்கப்படும் குச்சி, கை துடைக்கும் காகிதம், பிளாஸ்ரிக் பை இவ்வாறு பலவற்றை, பல கோடிப் பேர் தினமும் ஒருமுறை பயன்படுத்திவிட்டு, தூக்கி எறிவதுதான் குப்பை மேடுகளிலும், நீர்நிலைகளிலும் மலைபோலச் சேர்ந்து விடுகின்றன.

உலகெங்கும், ஆண்டுக்கு 150 மில்லியன் தொன் குப்பை, ஒருமுறை பயன்படுத்தி விட்டு கடாசப்படும் ரகம் என, வல்லுநர்கள் மதிப்பிட்டுள்ளனர். இந்த சுமையைக் குறைக்க, பலமுறை பயன்படுத்தும் வகையில் பொருட்களை வடிவமைக்கலாம் என்று களமிறங்கியுள்ளது, டென்மார்க்கை சேர்ந்த லொஸ்ட் ஒப்ஜெக்ட் நிறுவனம். இந்நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ள காது சுத்தப்படுத்தும் குச்சி, 1,000 கொட்டன் ஸ்வாப்களுக்கு வேலையில்லாமல் செய்துவிடும். தவிர, லொஸ்ட் ஒப்ஜெக்டின் காது சுத்தப்படுத்தும் குச்சியை, எளிதில் மறுசுழற்சி செய்யலாம்.

பொருட்களை பயன்படுத்தி விட்டு, நினைத்த இடத்தில் வீசி எறியும் உரிமையை, யார் நமக்குக் கொடுத்தது? யாரும் தரவில்லை... ஆனால், அவ்வாறு தொடர்ந்து செய்கிறோம். அதற்குக் காரணம், அவற்றுக்கு மாற்றாக சரியான பொருட்கள் சந்தைக்கு வரவில்லை. இப்போது, லொஸ்ட் ஒப்ஜெக்ட் போன்ற நிறுவனங்கள், அவற்றை செய்யத் தொடங்கி விட்டன.

முகக்கவசம், முகம் துடைக்கும் டிஷ்யூ காகிதம், பிளாஸ்ரிக் பை என்று பலவற்றுக்கும், லொஸ்ட் ஒப்ஜெக்ட் முன்வைத்துள்ள மாற்றுப் பொருட்களுக்கு, ஐரோப்பாவில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. மெல்ல மெல்ல இந்தக் கலாசாரம் உலகெங்கும் பரவினால், பூமி மீது குப்பைச் சுமை வெகுவாகக் குறையும்.



# நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் சகல கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை அவசியம்

## தயாசிறி எம்.பி. வலியுறுத்து



அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் சகல கட்சிகளுடனுமான பேச்சுவார்த்தை அவசியமென்றும், அதற்கு முன்னர் உத்தேச 21ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நிறைவேற்ற ஒட்டுமொத்த எம்.பிக்களும் ஒத்துழைக்காவிட்டால் அதன் பிரதிபலனை அவர்களே எதிர்கொள்ள நேரிடுமென்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்று கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரே மாதிரியான கட்டமைப்பை உருவாக்கவே முயற்சிக்கிறார்கள். புதிதாக அமைச்சரவையொன்று அமைக்கப்பட்டாலும் அதனை மக்கள் ஏற்றுக்கொள்வார்களா என்று கூற முடியாது. ஏற்றுக்கொள்மையினாலேயே அரசாங்கம் பதவி விலக வேண்டுமென மக்கள் கோருகிறார்கள்.

அதனை ஏற்றுக்கொள்ளாமல் தொடர்ந்து செயலாற்றுவார்களாக இருந்தால், மக்களின் கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்று ஏற்றுக்கொள்ள முடியாது.

அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவருவதற்கு முன்னர், அந்தப் பிரேரணையை கொண்டுவருவதற்கான காரணங்கள் என்னவென்று ஏனைய சகல கட்சிகளுடனும் கலந்துரையாட வேண்டும். நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு கையொப்பமிட்டால் மாத்திரம் போதாது.

இதுதொடர்பில் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்கும் கட்சிகள் மற்றும் எதிர்க்கட்சிகள் என்பன ஒன்றிணைந்து கலந்துரையாட வேண்டும். அதேபோன்று எதனடிப்படையில் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை சமர்ப்பிப்பது என்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும். அந்த காரணங்கள் வெளிப்படைய பேசப்படுமாக இருந்தால் மாத்திரமே ஏனைய கட்சிகள் அதற்கு ஆதரவளிக்க முன்வரும்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை சமர்ப்பிப்பதற்கு முன்னர் பெரும்பான்மை ஆதரவை திரட்டல், 113 பெரும்பான்மை வாக்கு, கட்சி ஆதரவு என்பவற்றை திரட்டிக்கொள்ள வேண்டும். நம்பிக்கையில்லாப் பிரேரணையை சமர்ப்பதும் அவசியம்.

அதற்கு முன்னர், 21ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நிறைவேற்ற வேண்டுமாயின் கொழும்பு காலி முகத்திடலில் இளைஞர்களினால் எழுப்பப்படும் கோரிக்கைகளிலிருந்து வெளியேற முடியாது. ஆகவே, உத்தேச 21 ஆவது அரசியலமைப்பு திருத்தத்துக்கு 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவளிக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அதன் பிரதி பலனை நாமே அனுபவிக்க வேண்டி ஏற்படும் என்றார்.

# 20 ஆம் திருத்தத்துக்கு ஆதரவளித்த முஸ்லிம் உறுப்பினர்களுக்கு வேட்புமனு கொடுக்க வேண்டாம்

## இம்ரான் மஹ்ரூப் எம்.பி. சஜித்திடம் வேண்டுகோள்

(திருகோணமலை செய்தியாளர்)



இருபதுக்கு ஆதரவளித்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட வேட்புமனு வழங்கக்கூடாது என நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எமது கட்சி சார்பாக கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட முஸ்லிம் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருபதாம் திருத்தத்துக்கு ஆதரவளித்து அரசாங்கத்துடன் இணைந்துகொண்டனர். ஆனால், அவர்களின் கட்சித் தலைவர் மட்டும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் உள்ளார்.

ஆனால், இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக அவர்களால் எந்த ஒழுக்காற்று நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இதனால் எமது வாக்குகளை பெற்று நாடாளுமன்றம் சென்று எமது கட்சிக்கும் வாக்களித்த மக்களுக்கும், துரோகம் செய்த இவர்களுக்கு எதிர்வரும் தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட வேட்புமனு வழங்கக்கூடாது என எமது கட்சி ஆதரவாளர்களும், பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் கிழக்கிற்கு விஜயம் செய்த எமது கட்சியின் செயலாளரும் இதே முடிவிலேயே உள்ளார். இலங்கை வாழ் முஸ்லிம்களின் நிலைப்பாடும் இவ்வாறே உள்ளது என நினைக்கிறேன்.

ஆகவே, இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்து இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை ஐக்கிய மக்கள் சக்தியின் எதிர்கால செயற்பாடுகள் எதிலும் இணைத்துக்கொள்ளக் கூடாது என்று தெரிவித்துள்ளார்.

# மதுரங்குளியில் விபத்து; ஒருவருக்குக் காயம்

(ரஸீன் ரஸ்மின்)



புத்தளம் - மதுரங்குளி கரிக்கட்டைப் பகுதியில் நேற்று (17) அதிகாலை இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் ஆபத்தான நிலையில் புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மதுரங்குளி கரிக்கட்டை பகுதியில் பயணிகளை இறக்குவதற்காக வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ் ஒன்றுடன், சொகுசுக் கார் ஒன்று பின்னால் வந்து மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக மதுரங்குளி பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து நேற்றிரவு மன்னாரை நோக்கிப் பயணம் செய்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் புத்தளம் கரிக்கட்டை பகுதியில் பயணி ஒருவரை இறக்குவதற்காக நிறுத்தி வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது புத்தளம் நோக்கிப் பயணம் செய்த சொகுசுக் கார் ஒன்று, வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த குறித்த பஸ் மீது பின்னால் வந்து மோதியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் சொகுசுக் காரின் சாரதி படுகாயமடைந்த நிலையில் அங்கிருந்தவர்களால் புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்தில் குறித்த சொகுசுக் காரின் முன் பக்கம் முழுமையாக சேதமடைந்துள்ளது.

அத்துடன், விபத்து சம்பவம் தொடர்பில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான குறித்த பஸ்ஸின் சாரதியிடம் வாக்குமூலம் பெறப்பட்டு, அந்த பஸ் விடுவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த விபத்து சம்பவம் தொடர்பில் மதுரங்குளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அமைச்சுப் பதவியை ஏற்றுக்கொள்ள மாட்டேன்

## சரத் வீரசேகர

புதிய அமைச்சரவையில் எந்தவொரு அமைச்சுப் பொறுப்பையும் ஏற்காதிருக்கத் தீர்மானித்துள்ளதாக முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் எட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமை காரணமாக இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளேன். நாட்டு மக்களின் பக்கமே எப்போதும் நான் இருப்பேன். தொடர்ந்தும் மக்களின் பக்கம் இருக்கவே விரும்புகிறேன் என்று தெரிவித்துள்ளார்.



# நுவரெலியா வசந்தகால மலர்க் கண்காட்சி ஆரம்பம்

(செ.திவாகரன்)



நுவரெலியாவில் தற்போது ஆரம்பமாகியுள்ள வசந்தகால நிகழ்வுகளை முன்னிட்டு நுவரெலியா மாநகரசபையால் விக்டோரியா பூங்காவில் ஏற்பாடு செய்யப்பட்ட மலர்க்கண்காட்சி நேற்று (17) உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த மலர்க் கண்காட்சியில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டிருந்தனர். அரச மற்றும் தனியார் பிரிவுகளிலிருந்து பல போட்டியாளர்களும் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளனர்.

இந்நிகழ்வில் வெற்றி காண்பவர்களுக்கு பணப்பரிசில்களையும், சான்றிதழ்களையும் வழங்க ஏற்பாடு செய்யப்படுள்ளது. நுவரெலியா மாநகர சபையின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த மலர்க் கண்காட்சியில் நுவரெலியா மாநகர சபையின் முதல்வர் சந்தனலால் கருணாரட்ன மற்றும் நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட உட்பட மாநகர சபை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

# மொனராகலையில் மக்கள் ஆர்ப்பாட்டம்

(கெலும் குணதிலக்க)



மொனராகலையில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இரண்டு நாட்களாக பெற்றோல், டீசல் பெற்றுக்கொடுக்காத காரணத்தினால் ஆத்திரமடைந்த மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மொனராகலை - வெல்லவாய பிரதான வீதியை வாகனங்களுடன் இடைமறித்துப் போராட்டம் நடத்தியதால் அங்கு பெரும் பதற்றம் நிலவியது. அத்துடன் நீண்ட நேரமாக வாகன நெரிசல் காணப்பட்டது.

அதன் பின்னர் அவ்விடத்துக்கு வந்த பொலிஸார் போராட்டக்காரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். மொனராகலையில் 24 மணித்தியாலங்களுக்குள் எரிபொருள் பெற்றுத்தருவதாக பொலிஸார் உறுதியளித்ததையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது.



உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு மட்டக்குளி, மோதரை மிஸ்பா ஜெப மிஷனரி ஆலயத்தினால் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் சமாதானம், இறை ஆசிகள் வேண்டி பாதயாத்திரையொன்று நேற்றுக் காலை நடைபெற்றது. மிஸ்பா ஜெப ஆலய போதகர் வண.ஜே.ஜே.சாரங்கபாணி தலைமையில் நடைபெற்ற பாதயாத்திரையில் கலந்துகொண்டவர்கள் சமாதானம், இறை ஆசிவழங்கும் சுலோகங்கள், தேசிய கொடிகளைத் தாங்கி பக்தி கீதம் பாடிச் சென்றபோது எடுக்கப்பட்ட படங்களைக் காணலாம். (படம் - ஏ.எஸ்.எம்.ஜாவித்)

# கோட்டா கோ கமவில் இடம்பெற்ற தமிழ் – சிங்கள புத்தாண்டுக் கொண்டாட்டம்

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

அரசாங்கத்தைப் பதவி விலகக் கோரி, அரசாங்கத்துக்கு எதிரான கோஷத்துடன் கடந்த ஒரு வார காலத்திற்கும் மேலாக காலி முகத்திடலில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக இன, மத பேதமின்றி சகல சமூகத்தினரும் ஒன்றிணைந்து மேற்கொண்டு வரும் எழுச்சிப் போராட்டத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்துகொண்டுள்ளனர்.

இவ்வாறான நிலையிலும் தமிழ் - சிங்கள புதுவருடத்தைக்கூட அவர்கள் பொருட்படுத்தாது போராட்டத்தில் ஈடுபட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

கடந்த 14ஆம் திகதி புதுவருடத்தை ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக வீதியில் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து பால் பொங்கியும், சிற்றுண்டிகள் பரிமாறியும் கொண்டாடிய காட்சியையும் காண முடிந்தது.









# பஸ் – முச்சக்கரவண்டி நேருக்கு நேர் மோதி விபத்து

## நால்வர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதி





(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதி, ஆரையம்பதி பாலமுனை சந்தியில் தனியார் பஸ்ஸும், முச்சக்கரவண்டி ஒன்றும் நேற்று (17) நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. இந்த விபத்தில் 4 பேர் படுகாயமடைந்த நிலையில், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பிலிருந்து களுவாஞ்சிக்குடியை நோக்கிப் பயணித்த தனியார் பஸ் வண்டியும், களுவாஞ்சிக்குடியிலிருந்து மட்டக்களப்பை நோக்கிப் பிரயாணித்த முச்சக்கரவண்டியும் ஆரையம்பதி பாலமுனை சந்தி வீதி வளைவில் சம்பவ தினமான நேற்றுப் பகல் 12.30 மணியளவில் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் முச்சக்கரவண்டி சாரதி உட்பட 4 பேர் படுகாயமடைந்தனர்.

இதனையடுத்து படுகாயமடைந்தவர்கள் உடனடியாக மட்டு. போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நெருக்கடியை ஏற்படுத்தி ஆட்சி பெற்றுக்கொண்ட எவராலும் அதிகாரத்தை தக்கவைக்க முடியாது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

நெருக்கடியை உருவாக்கி அதன் மீது ஆட்சி அதிகாரம் பெற்ற எவராலும் அந்த அதிகாரத்தை தக்கவைக்க முடியாதென்பதை இயற்கை பல முறை நிரூபித்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

மனிதகுலத்திற்கு விடுதலையின் வழியை போதித்த இயேசுநாதர், மனிதகுலத்தை பாவத்திலிருந்து மீட்பதற்காக சிலுவையில் உயர்த்தப்பட்ட நாளான உயிர்த்த ஞாயிறு நேற்று (17) அனுஷ்டிக்கப்பட்டது. இந்த உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

உலகத்தில் 220 கோடி வரையிலான கத்தோலிக்க பக்தர்கள் இயேசுபிரானின் மறைவை நினைவுகூர்ந்து புனித புதன்கிழமை முதல் 40 நாட்களாக உபவாசம், அன்னதானம் மற்றும் நற்கருணை ஆராதனைகள் உள்ளிட்ட மத வழிபாடுகள் போன்றவற்றில் ஈடுபட்ட உபவாச காலம் வெள்ளிக்கிழமையுடன் நிறைவுற்றதுடன், அதனைத் தொடர்ந்து இயேசுபிரானின் மறைவை நினைவுகூரும் உயிர்த்த ஞாயிறு பிறக்கிறது.

புனித வேதத்தின்படி, மீள் எழுதலையும் கிறிஸ்தவர்களுக்கு ஒரு புதிய வாழ்க்கை முறைக்கான எதிர்பார்ப்புகளையும் உயிர்த்த ஞாயிறு மூலம் இறைவன் ஏற்படுத்துகின்றான். இது கிறிஸ்துவின் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலைக் குறிக்கிறது.

2019 ஏப்ரல் 21ஆம் திகதி சில தேவாலயங்களை இலக்குவைத்து நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக மிகுந்த அனுதாபங்கள் நிறைந்த நினைவை இந்தத் தருணத்தில் நினைவுகூருவோம்.

இதுவரை வரலாற்றில் இந்த நாட்டினுள் மிலேச்சத்தனமான தாக்குதல் உயிர்த்த ஞாயிறு தினத்தில் நடத்தப்பட்ட ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலாகும். அந்தத் தாக்குதலின் பயங்கரமான நினைவுகள் இன்னும் இந்நாட்டிலுள்ள அனைவரின் மனதிலும் எதிரொலித்துக்கொண்டிருக்கின்றன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய அனைவருக்கும் எதிராக



சட்டத்தை அமுல்படுத்த வேண்டும். அவர்களுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பது நாம் ஆரம்பத்திலிருந்து எடுத்த நிலைப்பாடாகும். இது ஒருபோதும் மாறாத நிலைப்பாடாகும். தாக்குதலை நடத்தியவர்களையும், அதற்கு உறுதுணையாக இருந்தவர்களையும் காட்டுமிராண்டித்தனமான பயங்கரவாதிகள் என்று நேரடியாக அறிவிக்க ஐக்கிய மக்கள் சக்தியாகிய நாம் நிபந்தனையின்றி முன்வருவோம்.

அந்த கோழைத்தனமான தாக்குதல் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பாக வெறுப்புள்ளதுடன், அந்த கோழைத்தனமான தாக்குதல்களின் அதிர்ச்சி இன்னும் நம் இதயங்களில் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

பலரின் உயிரையும், இன்னும் சிலரது உறவினர்களையும் நண்பர்களையும் இழக்கச் செய்த உயிர்த்த ஞாயிறு கொடூரமான குண்டுவெடிப்பு சம்பவம் நடந்து இன்றுடன் மூன்று ஆண்டுகளாகின்றன.

அந்தக் கொடூர தாக்குதலினூடாக பலியானவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன்.

தாக்குதல்தாரிகள், அவர்களை வழிநடத்தியவர்களின் கொடூரமான நோக்கங்கள் எதுவாக இருப்பினும், அது மனிதகுல வரலாற்றில் கோழைத்தனமானதும் மிலேச்சதனம் மற்றும் தீய நோக்கமுமாகும். தாக்குதலின் சூத்திரதாரிகளை கண்டுபிடித்து தண்டனை வழங்குவது கட்டாய நடவடிக்கையாகும்.

பொய்யை சாக்காக வைத்து உண்மையை மறைக்க முடியாது. சட்டத்தின் முன்பும் இயற்கையின் முன்பும் உண்மையை வெளிப்படுத்தவேண்டிய நிலை ஏற்படும்.

“இறைவனுடைய ஆலயத்தை இடிப்பவன் இறைவனால் அழிக்கப்படுவான். ஏனென்றால், தேவனுடைய ஆலயம் பரிசுத்தமானது, இறை ஆலயம் இறைவனுடையது” என புனித பவுல் ஆண்டகை கூறியுள்ளார்.

நெருக்கடியை உருவாக்கி அதன்மீது ஆட்சி அதிகாரம் பெற்ற எவராலும் அந்த அதிகாரத்தை தக்கவைக்க முடியாது என்பதை இயற்கை பல முறை நிரூபித்துள்ளது.

தற்போது நிரூபணமாக்கிக்கொண்டிருப்பது அதன் நிதர்சனம் என்பதை நினைவுகூருவோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

## சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடலுக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் குறித்து இராஜதந்திரிகளுக்கு விளக்கமளிப்பு





நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை குறித்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், நிதியமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.யூ.எம்.அலி சப்ரி மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க ஆகியோர் அண்மையில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் நடைபெற்ற மாநாட்டில் நன்கொடையளிக்கும் நாடுகளுக்கு அறிவித்தனர்.

அடுத்த வாரம் இடம்பெறவுள்ள சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடலுக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மற்றும் நடைமுறைப் படுத்தப்படவுள்ள நடவடிக்கைகள் குறித்து இராஜதந்திர சமூகத்திற்கு இதன்போது விளக்கமளிக்கப்பட்டது.

இடைப்பட்ட காலத்தில் இணைப்பு நிதியுதவியை வழங்குமாறு நன்கொடையளிக்கும் நாடுகளுக்கு அமைச்சர்கள் அழைப்பு விடுத்தனர்.

பல்வேறு கேள்விகளுக்குப் பதிலளித்த அவர்கள், பரந்தளவிலான கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டனர். வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகேவும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டார்.

# புத்தளம் புனித மரியாள் தேவாலயத்தின் உயிர்த்த ஞாயிறு ஆராதனைகள்







(ரஸீன் ரஸ்மின்)

இயேசுகிறிஸ்துவின் உயிர்த்த தின நள்ளிரவு ஆராதனைகளும், திருப்பலி பூஜைகளும் நேற்று முன்தினம் இரவு புத்தளம் புனித மரியாள் கிறிஸ்தவ தேவாலயத்தில் இடம்பெற்றன.

இதன்போது ஈஸ்டர் தாக்குதலில் உயிர் நீத்தவர்களின் ஆத்மசாந்திக்காக பிரார்த்தனை செய்யப்பட்டதுடன், அவர்களுக்காக மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

அத்துடன், இலங்கையில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்றிலிருந்தும், பொருளாதார நெருக்கடியிலிருந்தும் நாடும், நாட்டு மக்களும் பாதுகாப்புப் பெறவேண்டும் எனவும் பிரார்த்தனைகளும் இடம்பெற்றன.

புத்தளம் பங்குத்தந்தை அருட்திரு பயஸ் கெனடி பெர்னாண்டோ திருப்பலி ஒப்புக்கொடுத்தார்.

இதன்போது, பரிசு மற்றும் உணவு பரிமாற்றம் என்பனவும் இடம்பெற்றன.

இந்த வழிபாட்டில் புத்தளம் பங்குத்தந்தை அருட்திரு பயஸ் கெனடி பெர்னாண்டோ உட்பட அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பக்தர்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

இதேநேரம் புத்தளம் மறைமாவட்டத்திலுள்ள அனைத்து பங்குகளிலுள்ள ஆலயங்களிலும் நேற்றிரவு விசேட ஆராதனைகள் இடம்பெற்றன.

மேற்படி ஆராதனைகளின்போது தேவாலயங்களில் பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# டெஸ்போட் ஸ்ரீ கருமாரியம்மன் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா



(செ.திவாகரன்)

கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்ட ஆலய வருடாந்த உற்சவத்தில், 13ஆம் திகதி உற்சவத்தின் தேர்த்திருவிழாவானது பெருமளவு மக்களின் பங்கேற்புடன் வெகு சிறப்பாக இடம் பெற்றது.

ஆரம்ப பூசை வழிபாடுகள், சிறப்பு வாத்திய இசையுடன் இடம்பெற்று விநாயகர் பெருமான், முருகப் பெருமான், ஸ்ரீ கருமாரி அம்மன் வெளிவீதி வலம் வந்து அலங்காரத் தேரில் அமர்ந்து பக்த அடியார்களின் அரோகரா முழக்கத்துடன் அருள் வழங்கும் காட்சி மிக அற்புதமாக இடம்பெற்றது.

14ஆம் திகதி சுபகிருது வருட பிறப்பு விசேட பூஜை வழிப்பாடுகள் இடம்பெற்றன. 15ஆம் திகதி டெஸ்போட் ஆற்றங்கரையிலிருந்து பால் குடம், அலகு காவடி எடுத்துவந்து தங்களது நேர்த்திக் கடனையும் செலுத்தினர். இதைத் தொடர்ந்து மகேஸ்வர சிறப்பு பூஜை மற்றும் அபிஷேகம் நடத்தப்பட்டு, பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

தொடர்ந்து 16ஆம் திகதி மாலையில்



ஆரம்பமான பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து தீர்த்த உற்சவத்துடன் கொடியிறக்கம் இடம்பெற்று விழா இனிதே நிறைவுற்றது.

## உறக்கத்திலேயே உயிரிழந்த மாணவி இரு மாத கர்ப்பிணி

### மருத்துவ பரிசோதனையில் அம்பலம்

பருத்தித்துறை மருத்துவமனையில் சடலமாக ஒப்படைக்கப்பட்ட சிறுமி 2 மாத கர்ப்பிணி என்பது உடற்கூற்றுப் பரிசோதனையில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

கரவெட்டியைச் சேர்ந்த 18 வயது மாணவி உறக்கத்தில் சுயநினைவற்று இருந்த நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

இந்நிலையில், சிறுமி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர், ஏற்கனவே உயிரிழந்துள்ளதாக மருத்துவ பரிசோதனையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சிறுமியின் சடலம் இறப்பு விசாரணைகளின் பின் உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. சட்ட மருத்துவ வல்லுநர் கனகசபாபதி வாசுதேவ முன்னிலையில் உடற்கூற்றுப் பரிசோதனை இடம்பெற்றது.

சிறுமி இரண்டு மாத கர்ப்பிணி என உடற்கூற்றுப் பரிசோதனையில் அறிக்கையிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





'சுப கிருது வருடம்' சித்திரை வருடப்பிறப்பு மலர்ந்ததையிட்டு உடப்பு ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதி பெருமாள் திரௌபதியம்மன் ஆலயத்தில் விசேட பூஜைகளும், பக்தர்களின் அர்ச்சனைத் தட்டு வழங்கும் நிகழ்வுகளும் இடம்பெற்றன. அத்துடன், ஆலய பிரதம குரு பஞ்சாச்சரக் குருக்களினால் சித்திரை வருடப்பிறப்பு பஞ்சாங்கமும் வாசிக்கப்பட்டது. ( படங்கள் - உடப்பு நிருபர்)

# 59 மில்லியன் ரூபா பெறுமதியான கேரள கஞ்சா மன்னாரில் மீட்பு







மன்னார் தெற்கு கடற்பரப்பில் நேற்று முன்தினம் (16) கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 197 கிலோ 60 கிராம் கேரள கஞ்சா கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடல் மார்க்கமாக முன்னெடுக்கப்படும் போதைப்பொருள் வியாபாரம் உள்ளிட்ட பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்காக கடற்படையினர் கடற்பகுதிகளை அண்மித்த வகையில் தொடர் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அதற்கமைய, மன்னார் தெற்கு கடற்பரப்பில் கடற்படையினர் சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சந்தர்ப்பத்தில் மிதந்துகொண்டிருந்த சந்தேகத்துக்கிடமான பொதிகள் சில பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளதுடன், அதன்போது 02 உறைகளில் சுமார் 50 பொதியிடப்பட்டிருந்த 197 கிலோகிராம் 60 கிராம் கேரள கஞ்சா கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடற்படையினரின் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளினால் கரையிறக்க முடியாமல் குறித்த கஞ்சா தொகையை சந்தேகநபர்கள் கடற்பரப்பிலிலேயே விட்டுவிட்டு, தப்பிச் சென்றிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்ட கேரள கஞ்சா தொகையின் சந்தைப் பெறுமதி 59 மில்லியன் ரூபா என கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றக்கட்ட கேரள கஞ்சா தொகையை கடற்படையின் ஒழுங்குப் பிரிவினரால் தீயிட்டு அழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.






மாவனல்லை ஸாஹிரா தேசிய பாடசாலையின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கல்லூரியின் பழைய மாணவர்களின் ஒன்றியமான “எக்ஸ் சாஹிரியன்ஸ்” இனால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 2022ஆம் ஆண்டின் மாணவ குழுக்களுக்கிடையிலான இரட்டையர் ஆட்ட கெரம் சுற்றுப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இந்தப் போட்டியில் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்ட 2004/7 வகுப்பைச் சேர்ந்த இம்ரான் கான் மற்றும் ரியாஸ் முஹம்மத் ஆகியோர் கிண்ணத்துடன் நிற்பதையும் அவர்களை கௌரவிக்கும் முகமாக நிகழ்வை ஏற்பாடு செய்த மாணவர் குழுவையும் படங்களில் காணலாம்.

# மன்னாரில் ஆயர் தலைமையில் இடம்பெற்ற ஈஸ்ரர் நள்ளிரவு திருப்பலி








(மன்னார் நகர் நிருபர்)

இயேசுவின் உயிர்ப்பு பெருவிழா (ஈஸ்டர்) திருவிழா திருப்பலி மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்தில் நேற்று முன்தினம் (16) இரவு 11.15 மணிக்கு இடம்பெற்றது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் குருக்கள் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இதன்போது மக்கள் சுகாதார நடைமுறைகளுக்கமைவாக கலந்துகொண்டனர்.

திருவிழா திருப்பலி இடம்பெற்றபோது ஆலயத்தைச் சூழ பொலிஸாரின் பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டிருந்தன.

மன்னார் மறைமாவட்டத்திலுள்ள பல்வேறு ஆலயங்களிலும் நள்ளிரவு திருப்பலி இடம்பெற்றது.

நேற்று (17) காலையும் திருவிழா திருப்பலி ஆலயங்களில் ஒப்புக்கொடுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# யாழ். மருத்துவ பீட முன்னாள் பீடாதிபதி காலமானார்!



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் முன்னாள் பீடாதிபதியும், உயிர் இரசாயனவியல் துறைத் தலைவருமான பேராசிரியர் எஸ். பாலகுமாரன் இயற்கை எய்தினார்.

யாழ்.உடுப்பிட்டியைச் சேர்ந்த பேராசிரியர் எஸ்.பாலகுமாரன் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவராவார். யாழ். பல்கலைக்கழக உயிர் இரசாயனவியல் துறையின் விரிவுரையாளராக இணைந்துகொண்ட இவர், மூத்த விரிவுரையாளராகக் கடமையாற்றிய அதேவேளை 2012 ஆம் ஆண்டுமுதல் மருத்துவ பீடத்தின் 9ஆவது பீடாதிபதியாகப் பதவி வகித்தார்.

இவர் பீடாதிபதியாகப் பதவிவகித்த காலத்தில் மருத்துவ பீடத்துக்கென அதிநவீன வசதிகளைக் கொண்ட ஹூவர் கலையரங்கம் 2014ஆம் ஆண்டு சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டதுடன், அதே ஆண்டில் மருத்துவ பீட பரீட்சை மண்டபமும் திறந்துவைக்கப்பட்டது.

மருத்துவக் கல்வி மற்றும் மருத்துவத் தேவைகளுக்காக தற்போது யாழ்.போதனா மருத்துவமனைக்கு அருகில் அமைக்கப்பட்டு வரும் ஐந்து மாடிகளைக் கொண்ட கட்டடத்துக்கான காணியை நன்கொடையாகப் பெற்றுக்கொடுப்பதில் இவர் பெரும் பங்காற்றியிருந்தார்.

கற்பித்தல் நடவடிக்கைகளுக்கப்பால் மாணவர்களைச் சிறந்த முறையில் வழிகாட்டுவதிலும், அதனது நிர்வாகத் திறனினூடாக மருத்துவ பீடத்தைத் தரமுயர்த்துவதிலும் பெரும் பங்காற்றியிருக்கிறார்.

2019 இல் இவருக்குத் திறமை அடிப்படையில் உயர் இரசாயனவியலில் பேராசிரியராகப் பதவியுயர்வு வழங்கப்பட்டது. இவரது மறைவு மருத்துவத்துறையில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், மருத்துவ பீடாதிபதி, முன்னாள் பீடாதிபதிகள், மருத்துவ பீட பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் மருத்துவர்கள் பலர் இவரது மறைவு குறித்துத் தமது இரங்கல்களை வெளியிட்டுள்ளனர்.

# நாட்டின் ஆட்சியை ஒரு வருடத்திற்கு தமிழ்த் தரப்பிற்கு வழங்குங்கள்

## செல்வம் எம்.பி. வேண்டுகோள்




(வவுனியா நிருபர்)

நாட்டின் ஆட்சியினை ஒரு வருடத்திற்கு தமிழ்த் தரப்பிற்கு வழங்குங்கள். ஒரு வருடத்தில் இந்த நாட்டினை நிமிர்த்திக் காட்டுகின்றோம் - என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் (16) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

ஜனாதிபதியாகும் தகுதி கோட்டாபயவிற்கு இல்லை என்று எமது மக்கள் வாக்குகள் மூலம் அன்றே தெளிவாக சொல்லியிருந்தார்கள். கோட்டாவும், மஹிந்தவும் ஆயுதப் போராட்டத்தினை மௌனிக்க செய்ததாக வெற்றிவிழா கொண்டாடினார்கள். ஆனால், சர்வதேசத்தின் உதவியுடன்தான் எமது போராட்டத்தினை மௌனிக்கச் செய்தார்களே தவிர, இவர்களது திறமையால் மௌனிக்கவில்லை என்பதை இன்று விளங்கிக்கொள்ள முடியும்.

தற்போது சிங்கள மக்கள் போராட்டத்தினை முன்னெடுத்துள்ளனர். இதன்மூலம் எமது போராட்டம் நியாயமானது என்பதை ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் போராட்டக்காரர்களால் வெளிப்படையாக கருத்துகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. இதனை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஈழத்தை கொடுத்திருந்தால் அது பணத்தை தந்திருக்கும் என்று முன்னாள் இராணுவ வீரர் ஒருவர் சொல்கிறார்.

அன்று இரத்தினபுரியில் இயற்கை அனர்த்தம் ஏற்பட்டபோது விடுதலைப் புலிகள் சிங்கள மக்களுக்கு உதவிகளை வழங்கியிருந்தனர். அந்த வரலாறை நாம் மறக்க முடியாது. எனவே, அனைத்து இனங்களும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்ற சிந்தனை ஓட்டத்தினை நாங்கள் இன்று செய்தாக வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சிங்கள மக்களிடம் ஒரு வேண்டுகோளை விடுக்கின்றேன். தமிழ்த் தரப்பிற்கு ஆட்சியினை ஒரு வருடம் வழங்குங்கள். ஒரு வருடத்தில் இந்த நாட்டினை நிமிர்த்திக் காட்டுகின்றோம்.

தமிழ் - சிங்கள மக்களுக்கும் சம அந்தஸ்து வழங்கும்படியாக எமது செயற்பாடு இருக்கும். அதை நாங்கள் எமது போராட்டக் காலங்களில் நிரூபித்துக் காட்டியிருக்கின்றோம்.

அத்துடன், இந்த ஜனாதிபதி முறைமையால் தமிழ் மக்களே அதிகம் பாதிக்கப்பட்டிருந்தனர். தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்டிருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தன்னுடைய அதிகாரத்தினை தமிழ் மக்களுக்காக ஒருமுறையும் பயன்படுத்தவில்லை. குறிப்பாக, ஆனந்த சுதாகரனை விடுதலை செய்யக்கூட அது பயன்படவில்லை. இதுதான் இலங்கையின் நியதி.

எனவே, ஜனாதிபதி முறைமையை நீக்க வேண்டும் என்ற கோரிக்கையை நாம் முன்வைக்கவேண்டும். அதற்கான சரியான பேரம்பேசலுக்கான சந்தர்ப்பம் இன்று ஏற்பட்டுள்ளது. எனவே, நாடாளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் தமிழ்க் கட்சிகள் ஒன்றாக இணைந்து இதற்கான முடிவுகளை எடுக்க வேண்டும் – என்றார்.

வடக்கு செய்திகள்

thamilannorth@gmail.com

# பொருளாதார நெருக்கடியை ஆராய தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து குழு அமைப்பு




நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி தொடர்பாக அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து பொதுவான குழு ஒன்றினை அமைத்து அதனூடாக செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளதாக தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி சிறிகாந்தா தெரிவித்தார்.

நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்று முன்தினம் (16) இடம்பெற்ற தமிழ்க் கட்சிகள், சிவில் அமைப்புகள், அரசியல் ஆய்வாளர்கள் பங்கேற்ற கலந்துரையாடலுக்கு பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


நாட்டிலுள்ள பொருளாதாரப் பிரச்சினைகள் தொடர்பில் ஒவ்வொரு கட்சியும் தனித்தனியாக கருத்துகள் தெரிவிப்பதை விட கூட்டாக தீர்மானங்கள் எடுப்பதே சிறந்தது. இந்த விடயத்தில் இணக்கமான முடிவொன்று எட்டப்பட்டது.

இந்த ஒன்றுகூடலில் பங்கேற்ற அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகளிலிருந்து ஒவ்வொரு பிரதிநிதியைத் தெரிவுசெய்து செயற்பாட்டுக் குழு ஒன்று அமைத்து அதன் மூலம் எதிர்வரும் செவ்வாய் அல்லது புதன்கிழமைகளில் ஒன்றுகூடி மீண்டும் இது தொடர்பாகக் கலந்துரையாடுவோம் - என்றார்.

# யாழ். மரியன்னை தேவாலயத்தில் இடம்பெற்ற ஈஸ்ரர் நள்ளிரவு திருப்பலி







கிறிஸ்தவ வாழ் மக்கள் தமது தவக்காலத்தின் நிறைவு நாளினை முன்னிட்டு உயிர்த்த ஞாயிறு கூட்டுத்திருப்பலி யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து தேவாலயங்களிலும் ஆராதனையுடன் சிறப்பாக இடம்பெற்றது.

இதனை முன்னிட்டு வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். மரியன்னை பேராலயத்திலும் நேற்று (17) காலை உயிர்த்த ஞாயிறு கூட்டுத்திருப்பலி இடம்பெற்றது.

இத்திருப்பலி யாழ். மறைமாவட்ட ஆயரின் அருட்சகோதரர் என்.டீபன்ராஜ் தலைமையில் நடத்திவைக்கப்பட்டது.

தவக்காலத்தின் மறுமலர்ச்சியில் உயிர்த்த ஞாயிறு அன்று 'இயேசுபிரான் காட்டிய வாழ்வியல் பாடங்கள்' என்னும் தலைப்பிலான சிறப்பு கூட்டுப்போதனையும் இடம்பெற்றது.

இதில் யாழ். மாவட்டத்திலிருந்து பல பாகங்களிலும் வருகைதந்த கிறிஸ்தவ மக்கள் கலந்துகொண்டனர்.

# நாய்க்கடிக்குள்ளாகிய குடும்பத்தலைவர் நீர்வெறுப்பு நோயினால் உயிரிழப்பு

தெருநாய் மற்றும் பூனையின் நகங்கள் கீறலுக்குள்ளாகிய குடும்பத்தலைவர் நீர்வெறுப்பு நோய்க்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

அவர் விலங்கு விசர்நோய்த்தடுப்பூசி பெற்றுக்கொள்ளாமையினால்தான் நீர்வெறுப்பு நோய்க்குள்ளாகினார் என்று சட்ட மருத்துவ வல்லுநரின் விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கடற்கரை வீதியைச் சேர்ந்த அந்தோனி சூசைநாதன் (வயது 35) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

3 மாதங்களுக்கு முன்பு தெருநாய்க்கடிக்கு உள்ளாகிய குடும்பத்தலைவர் அதுதொடர்பில் மருத்துவ சிகிச்சை பெறாததால் விலங்கு விசர்நோய்த்தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளத் தவறியுள்ளார்.

அத்துடன், 2 மாதங்களுக்கு முன்பு பூனையும் அவருக்கு நகங்களால் கீறியுள்ளது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறையிலுள்ள சகோதரி வீட்டில் தங்கிருந்தபோது அவருக்கு கடந்த வியாழக்கிழமை திடீரென நடுக்கம் ஏற்பட்டுள்ளது. அதனால் அவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

மேலதிக சிகிச்சைக்காக அவர் கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். எனினும், அவர் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் விசாரணைகளை முன்னெடுத்தார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# யாழில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டு அலுவலகம் திறந்துவைப்பு



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகம் நேற்று முன்தினம் (16) 10 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அமைந்துள்ள இராமநாதன் வீதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்போது கட்சி செயற்பாட்டாளர்களுடனான கலந்துரையாடலும் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் சி.இளங்கோ, நல்லூர் பிரதேச சபை தவிசாளர் மயூரன், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், கட்சியின் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலுக்குப் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன்,

யாழ். மாவட்டத்தில் குறிப்பாக யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேசங்களில் இருக்கின்ற கட்சியின் செயற்பாட்டாளர்களை அழைத்து எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்தோம். எங்கள் கட்சியை நிறுவன மயப்படுத்தி எதிர்வரும் காலத்தில் செயற்படுவதற்கு இணங்கியிருக்கின்றோம்.

கடந்த பத்து ஆண்டுகளாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியாக இயங்குகின்றவர்களுக்கு மாத்திரமே அதன்மீது உரிமை இருக்கின்றது. நடைமுறையில் இரண்டு பிளவுகள் காணப்படுகின்றன. ஆனாலும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் எட்டு மாவட்ட அமைப்பாளர்களும் அண்மையில் வவுனியாவில் ஒன்றுகூடி கட்சியை தூய்மைப்படுத்தி முன்கொண்டு செல்வதற்கு தீர்மானித்துள்ளோம் - என்றார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமக்குரியது என்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் அணி உரிமை கோரி வருகின்றது.

யாழ். மாநகர சபை உறுப்பினராக இருந்தவரான மணிவண்ணன் முதல்வராவதற்கு முன்னர் இதே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினராக இருந்தார்.

எனினும், 2020 நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் அவரை கட்சியை விட்டு நீக்கியதாக கஜேந்திரகுமார் தரப்பு அறிவித்தது. அதை எதிர்த்து மணிவண்ணன் வழக்குத் தொடர்ந்தார். அதில் அவர்களைக் கட்சியைவிட்டு நீக்கியமை தவறு என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இதற்கிடையில் யாழ். மாநகர சபை முதல்வர் பதவியையும் மணிவண்ணன் கைப்பற்றிக்கொண்டார்.

அதிலிருந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குள் மணிவண்ணன் அணி ஒன்று உருவாகியது. அதுமுதல் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியைத் தன் வசப்படுத்துவதற்கான முனைப்புகளில் மணிவண்ணன் அணியினர் ஈடுபட்டு வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மிருசுவில் வடக்கு பாரதி முன்பள்ளி சிறார்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு



(சாவகச்சேரி நிருபர்)

மிருசுவில் வடக்கு பாரதி முன்பள்ளி சிறார்களுக்கு சித்திரைப் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

புலம்பெயர் உறவான க.விதுசனின் நிதிப் பங்களிப்பில், இலங்கை முதலுதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபை ஊடாக குறித்த உதவித்திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

முன்பள்ளி ஆசிரியர் இ.மேரி அனைக்கிலேற் தலைமையில் முன்பள்ளியில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற பொங்கல் விழாவில் 48 சிறார்களுக்கு குறித்த கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

# போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம் ஊரெழு பகுதியில் போதை மாத்திரைகள் மற்றும் போதை யூட்டக்கூடிய பொருட்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கோப்பாய் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று முன்தினம் (16) கைதுசெய்யப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஊரெழு பகுதியில் போதை மாத்திரை வியாபாரத்தில் ஒருவர் ஈடுபட்டு வருவதாக பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் குறித்த நபரைக் கைதுசெய்துள்ளனர்.

அவரிடமிருந்து 500இற்கும் மேற்பட்ட போதை மருந்துகள் மற்றும் பல பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

# ஈஸ்டர் தின தாக்குதலுக்கு நீதி கோரி கல்முனையில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்





(பாறுக் ஷிஹான்)

கல்முனை திரு இருதயநாதர் ஆலயத்தின் முன்னால் கல்முனைவாழ் கிறிஸ்தவ மக்கள் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை எனவும் உடனடியாக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றினை நேற்று (17) ஆராதனையின் பின்னர் மேற்கொண்டனர்.


இக்கவனயீர்ப்புப் போராட்டமானது கல்முனை திரு இருதயநாதர் ஆலய பங்குத்தந்தை அருளானந்தன் தேவதாஸன் தலைமையில் காலை இடம்பெற்றதுடன், சுமார் நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டு எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பி குறித்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நீதிவேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது போராட்டக்காரர்கள் கர்தினாலின் குரலுக்கு செவிசாயுங்கள், இனவாதம் காட்டி உறவுகளைப் பிரிக்காதீர்கள், இறந்து போனவர்களுக்கான கண்ணீர் அஞ்சலி, இறந்துபோனவர்களுக்கு நீதி வேண்டும், இனவாதம் காட்டி எங்களைப் பிரிக்காதீர்கள், பயங்கரவாதத்தினை நிறுத்துங்கள், அரசன் அன்று கொல்வான் இறைவன் நின்று கொல்வான் என அரசுக்கு எதிராக பல்வேறு சுலோகங்கள் தாங்கியவாறு கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்ட பின்னர் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

இதேவேளை, குறித்த போராட்டத்திற்கு பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு 3 வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் அதனை நினைவுகூர்ந்து நாடளாவிய ரீதியிலுள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் விசேட திருப்பலிகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# விளையாடிக்கொண்டிருந்த ஏழு வயது சிறுவன் கிணற்றில் விழுந்து உயிரிழப்பு



(மீராவோடை நிருபர்)

ஏழு வயது சிறுவன் ஒருவன் கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாகனேரி பகுதியிலுள்ள கிணற்றில் விழுந்தே குறித்த சிறுவன் உயிரிழந்துள்ளார்.

நண்பர்களோடு நேற்று முன்தினம் (16) விளையாடிக்கொண்டிருந்தபோது பாதுகாப்பற்ற நிலையிலிருந்த கிணற்றில் சிறுவன் விழுந்து உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்த சிறுவனின் தாய் வெளிநாடு சென்றுள்ள நிலையில், சிறுவன் தந்தையின் பராமரிப்பில் வசித்து வந்துள்ளார்.

உயிரிழந்த சிறுவனின் உடல் பிரேத பரிசோதனைக்கு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கோட்டைக்கல்லாறு பாலத்திற்கு அருகில் பல மாதங்களாக அகற்றப்படாத குப்பைகள்



(நிந்தவூர் நிருபர்)

மட்டக்களப்பு கோட்டைக்கல்லாறு பாலத்திற்கு அருகில் பல மாதங்களாக அகற்றப்படாத நிலையில் குப்பைகள் நிறைந்து காணப்படுகின்றன.

பாலத்திற்கு அருகில் குப்பைகள் போடவேண்டாம் என மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபையால் அறிவித்தல் பதாகை காட்சிப்படுத்தப்பட்டிருந்தபோதிலும் அதனையும் பொருட்படுத்தாது அந்த இடத்தில் பொதுமக்கள் குப்பை கொட்டி வருவதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

பாலத்திற்கு அருகில் கொட்டப்படும் அதிகளவிலான குப்பைகள் பிரதான வீதியால் பயணிப்போரினாலேயே வீசப்படுவதாக பிரதேசவாசிகள் மேலும் தெரிவித்தனர்.

# ஜேர்மன் நாடாளுமன்ற உறுப்பினர் மோஹாத் மட்டக்களப்பு மாநகர சபைக்கு விஜயம்!




(கல்லடி நிருபர்)

இலங்கை பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக இக்கட்டான நிலையிலுள்ளதால், மத்திய அரசாங்கத்திடமிருந்து அபிவிருத்திகளை எதிர்பார்க்க முடியாது. இதன் காரணமாக மாநகர சபையின் அபிவிருத்தியில் பங்காளியாக இணைந்துகொள்ளுமாறு மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தியாகராஜா சரவணபவன் வேண்டுகோள் விடுத்தார்.

ஜேர்மன் நாடாளுமன்ற உறுப்பினர் மோஹாத் நேற்று முன்தினம் (16) மட்டக்களப்பு மாநகர சபைக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். இந்நிலையில், வருகை தந்த அவரை மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் வரவேற்று, மாநகர சபையின் வாகனப் பகுதியையும் காண்பித்தார்.

2003ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஜேர்மன் நாடாளுமன்ற உறுப்பினர் மோஹாத் ஜேர்மனியின் மூனிச் மாநகர முதல்வராயிருந்த காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்கீழ் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், கிழக்கு மாகாணத்திற்கு விஜயம்செய்திருந்த ஜேர்மன் மூனிச் முன்னாள் முதல்வரும் தற்போதைய ஜேர்மன் நாடாளுமன்ற உறுப்பினருமான மோஹாத்துக்கு பெரு வரவேற்பளிக்கப்பட்டது. இதன்போது மாநகர சபைக்கு உடன்படிக்கையின்கீழ் 2003ஆம் ஆண்டு அன்பளிப்பு செய்யப்பட்ட வாகனங்களைப் பார்வையிட்ட அவர், குறித்த வாகனங்கள் சிறந்த முறையில் பராமரிக்கப்படுகின்றமை குறித்து, முதல்வருக்குத் தமது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து மாநகர சபை மண்டபத்தில் மாநகர சபை முதல்வர் மற்றும் உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார்.

கடந்த காலத்தில் ஜேர்மன் மூனிச் மாநகர சபையினால் மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகள் மற்றும் உதவிகளுக்கு நன்றி தெரிவித்த மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தியாகராஜா சரவணபவன், எதிர்காலத்தில் ஜேர்மன் அரசு ஊடாக ஒப்பந்தங்களைச் செய்து மேலும் அபிவிருத்திப் பணிகளை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த மாநகர முதல்வர்:-

அவருடன் நடைபெற்ற கலந்துரையாடலில் பல்வேறு விடயங்கள் அலசி ஆராயப்பட்டன. இலங்கை அரசாங்கமானது மட்டக்களப்பு மாநகர சபை மட்டுமன்றி, தமிழ்ப் பகுதிகளை மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே நோக்கி வருகின்றது. மட்டக்களப்பு மாநகர சபையின் வளங்களில் 90 சதவீதமானவை அரச சார்பற்ற நிறுவனங்களினால் நன்கொடை செய்யப்பட்டவையாகவே இருக்கின்றன. மத்திய அரசாங்கத்தின் மூலம் கிடைக்கும் வளங்கள் மிக மிகக் குறைவாகும் என்பதை மிகவும் தெளிவாகக் கூறியிருந்தோம்.

யுத்த காலத்திலிருந்த நிலைப்பாடுகளே யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னரும், தமிழர்களின் பகுதிகளில் கடைப்பிடிக்கப்படுகின்றன. நன்கொடைகள் மூலமாகவும், வெளிநாட்டு உதவிகள் மூலமாகவுமே வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நடைபெறும் அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதிகள் கிடைக்கப்பெறுகின்றன. மத்திய அரசாங்கத்தின் சொந்த நிதியுதவிகள் என்பது மிகவும் குறைவாகவேயிருக்கின்றது. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான நிதி யொதுக்கீடுகள் மட்டுமே உறுதிப்படுத்தப்பட்ட ஒதுக்கீடாக வருகின்றன என்பதைத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கின்றோம்.

மட்டக்களப்பு மாநகர சபையினைப் பொறுத்தவரையில் சொந்த நிதியூடாகவும், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாகவுமே வளங்கள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக ஜனாதிபதியை பதவியை விட்டு விலகுமாறு போராட்டங்கள் நடைபெற்றுகொண்டிருக்கும் காலத்தில் வெறுமனே கதிரைகளை மாற்றாமல், அரசியலமைப்பில் ஒரு நிரந்தர மாற்றத்தினை ஏற்படுத்துவதன் மூலமே இந்த நாட்டில் பொருளாதார முன்னேற்றத்தினைக் காணமுடியும். இந்நிலையில் அனைத்து மக்களும் இன, மத, மொழி கடந்து போராடிக் கொண்டிருக்கின்றனர் - என்றார்.

# திருகோணமலை கந்தமலாவ பகுதியில் 15 வயது சிறுமி பாலியல் வன்புணர்வு

## இளைஞரொருவர் கைது

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை கோமரங்கடவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கந்தமலாவ பகுதியில் 15 வயதுடைய சிறுமியொருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் பேரில் இளைஞரொருவரை நேற்று (17) கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட குறித்த சந்தேகநபரை திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பாதிக்கப் பட்ட சிறுமி வைத்திய பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக கோமரங்கடவல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# ஆற்றில் குளிக்கச்சென்ற 20 வயது நபர் முதலை தாக்குதலில் மரணம்

(மீராவோடை நிருபர்)

முதலை தாக்கியதில் நபரொருவர் உயிரிழந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோரகல்லிமடு பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய பூபாலப்பிள்ளை துரைராசா எனும் நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் (16) விவசாய நடவடிக்கையை முடித்துவிட்டு கானந்தனை பகுதி ஆற்றில் குளித்துக்கொண்டிருந்தபோதே இவர் முதலை தாக்கி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த நபரின் உடல் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் உயிர்த்த ஞாயிறு தின விசேட ஆராதனை




(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மென்ரசா வீதியிலுள்ள சீயோன் தேவாலயத்தில் உயிர்த்த ஞாயிறு தின விசேட ஆராதனை நேற்று ஞாயிற்றுக்கிழமை (17) போதகர் ரொசான் மகேசன் தலைமையில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு - திருகோணமலை பிரதான வீதியிலுள்ள மென்ரசா வீதியில் புதிதாக சீயொன் தேவாலயம் அமைக்கப்பட்டு அங்கு நேற்று உயிர்த்த ஞாயிறு விசேட ஆராதனையில் நூற்றுக்கணக்கான கிறிஸ்தவ மக்கள் கலந்துகொண்டனர்.

கடந்த 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி சீயோன் தேவாலயத்தில் உயிர்த்த ஞாயிறு தினத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பின் சஹ்ரான் காசீம் தலைமையிலான தற்கொலை குண்டுத் தாக்குதலில் 31 பேர் உயிரிழந்ததுடன், 93 பேர் படுகாயமடைந்ததுடன் தேவாலயம் பாதிப்படைந்து இன்று 3 வருடங்கள் நிறைவடைந்துள்ளதுடன், குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்களுக்கு சாந்திவேண்டி ஆராதனையில் ஈடுபட்டனர்.

இதேவேளை, இந்த உயிர்த்த ஞாயிறு ஆராதனையை முன்னிட்டு மாவட்டத்திலுள்ள அனைத்து கிறிஸ்தவ தேவாலயங்களிலும் பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தட்டுப்பாடு காரணமாக கண்காணிப்பு முறைமூலம் தேவையானோருக்கு மருந்துகள் வழங்கிவைப்பு

(பாறுக் ஷிஹான்)

பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக மருந்துகளுக்கான தட்டுப்பாடு தவிர்க்க முடியாத அளவில் ஏற்பட்டுள்ள இச்சூழலில் கல்முனை பிராந்தியத்தைப் பொறுத்தமட்டில் நாங்கள் மிகுந்த சிரத்தையோடு இம்மருந்து தட்டுப்பாட்டினை பொதுமக்களுக்கு பங்கம் ஏற்படாத வகையில் கையாண்டுகொண்டு இருக்கின்றோம் - என சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நேற்று (17) இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் அங்கு கருத்து தெரிவிக்கையில்,

நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிக்குள் இன்றைய காலகட்டத்தில் எரிபொருள் தட்டுப்பாடு, சுகாதாரத்துறையில் காணப்படுகின்ற மருந்து தட்டுப்பாடுகள் போன்றவற்றை முக்கியமாக இவ்விடத்தில் குறிப்பிடவேண்டியுள்ளது. முதலாவதாக, நமது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மருந்துகளுக்கான தட்டுப்பாடு தவிர்க்க முடியாத அளவில் ஏற்பட்டுள்ள இச்சூழலில் கல்முனை பிராந்தியத்தைப் பொறுத்தமட்டில் நாங்கள் மிகுந்த சிரத்தையோடு இம்மருந்து தட்டுப்பாட்டினை பொதுமக்களுக்கு பங்கம் ஏற்படாத வகையில் கையாண்டுகொண்டு இருக்கின்றோம்.

அந்த அடிப்படையில் ஆரம்பத்திலிருந்து திட்டமிடப்பட்ட வகையில் எமது பிரதேசத்திற்கான மருந்துகள் ஒழுங்குபடுத்தப்பட்டு வழங்கப் பட்டுள்ளதுடன், வீண்விரயங்களை தவிர்ப் பதற்காக எமது பிரதேசத்தில் RESOURCE MAPPING என்ற செயற்பாட்டின் ஊடாக சகல வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளை ஒன்றிணைத்த ஒரு




கண்காணிப்பு முறைமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்த அடிப்படையில் எவ்விடத்தில் எல்லாம் மருந்துகள் தேவையாக இருக்கின்றதோ அதற்கேற்றவாறு உரிய இடத்திற்கு கொண்டு சேர்க்கின்ற ஒரு நடைமுறையினை உருவாக்கி இருப்பதன் காரணமாக தற்பொழுது மிக மோசமான மருந்து தட்டுப்பாடு அல்லது உபகரண தட்டுப்பாடுகள் எமது கல்முனை பிராந்தியத்தில் குறைவாகவே காணப்படுகின்றன. இருந்தாலும் காலப்போக்கில் இவை ஏற்படுவதற்கு சாத்தியகூறுகள் இருக்கின்றன. அந்தவகையில் மிகவும் சிரமத்துடன் இந்த விடயத்தினை கையாண்டு வருகின்றோம்.

குறிப்பாக, மருந்து தட்டுப்பாடுகள் தனியார் மருந்தகங்கள் வைத்தியசாலைகளில் நிலவுகின்ற சூழலில் எமது மக்களுக்கான மருந்துகள் எம்மிடத்தில் ஓரளவு கையிருப்பில் இருப்பதன் காரணமாகவும் போக்குவரத்து செலவு, தனியார் வைத்தியசாலைகளின் செலவுகள் அதிகரித்துள்ள நிலையில் பொதுமக்கள் எமது வைத்தியசாலைகளை நாட முடியும் என்ற மகிழ்ச்சியான செய்திகளை நாம் எத்திவைக்க விரும்புகின்றோம்.

அந்தவகையில் எமக்கான வைத்தியசாலையில் நிலவுகின்ற அத்தியாவசிய மருந்துகளின் தட்டுப்பாடுகள் நிலவுவதற்கு அதிகமான வாய்ப்புகள் காணப்படுகின்றன. முடிந்தளவு எமது மருந்து விநியோகம் நோயாளிகளை தரப்படுத்தல் அவர்களுக்கான சிகிச்சையளித்தல் என்பவற்றிலும் ஒரு ஒழுங்குமுறையை பின்பற்றி தேவைக்கு முன்னுரிமை கொடுக்கக்கூடிய அத்தியாவசிய நிலைமைகளை கையாளுமாறு எமது பிராந்தியத்திலுள்ள வைத்திய நிறுவன அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்விடயத்திற்கு பொறுப்பான அவ்வதிகாரி களின் காத்திரமான ஒத்துழைப்பும் கிடைத்து வருகின்றது. அந்தவகையில் பிரதேச வைத்தியசாலைகள், ஆதார வைத்தியசாலை களிலும் நோயாளர்கள் தயக்கமின்றி வைத்திய தேவைகள், மருந்துகளை பெற்றுக்கொள்ள முடியும் - எனக் குறிப்பிட்டார்.

# எரிபொருள் வழங்கியும் விவசாய நடவடிக்கையை மேற்கொள்ளாது மெத்தனப்போக்குடன் விவசாயிகள்

## பாரிய உணவுத்தட்டுப்பாடு ஏற்படுமென சம்மாந்துறை பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் நவாஸ் எச்சரிக்கை

(மாளிகைக்காடு நிருபர்)

ஒவ்வொருநாளும் நூற்றுக்கணக்கான உழவு இயந்திரங்கள் வரிசையில் நின்று எரிபொருளை பெற்றுக்கொள்கின்றன. ஆனால் வயலில் இறங்கி ஒருசில உழவு இயந்திரங்களே விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. இலங்கையின் அரிசி தேவையில் ஐந்தில் ஒரு பங்கை பூர்த்திசெய்யும் அம்பாறை மாவட்ட விவசாயிகள் இவ்வாறு மெத்தனப்போக்குடன் இருப்பதானது பிற்காலத்தில் பாரிய உணவு நெருக்கடியை உண்டாக்கும் வாய்ப்பிருக்கிறது.

விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்க்க பள்ளிவாசல்கள் ஊடாகவும், பொலிஸாரின் உதவியுடனும் பல்வேறு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளோம். உழவுத் தேவைகளுக்காக தினமும் தனியான வரிசையமைத்து உழவு இயந்திரங்களுக்கு எரிபொருள் வழங்கப்படுகிறது. கிராமசேவகர் ஊடாக எரிபொருள் அட்டைகளை வழங்கியும், தாங்கிகளுக்கு முழுமையான அளவு எரிபொருள் வழங்கியும் 5-10 சதவீதமான நிலங்கள் மட்டுமே இப்போது உழுதுள்ளனர். காலம் கடந்து விவசாயம் செய்வதனால் பயிர்களுக்கு அரக்கொட்டியடித்து நஷ்டம் உண்டாகும் நிலை ஏற்படும் - என சம்மாந்துறை பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் எம்.எஸ்.எம்.நவாஸ் தெரிவித்தார்.




சம்மாந்துறை நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (16) நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு மேலும் கருத்து வெளியிட்ட அவர், சம்மாந்துறை பிரதேசத்தில் விவசாய நடவடிக்கைகளை துரிதப்படுத்தி விவசாயத்தை மேம்படுத்த சம்மாந்துறை அப்துல் மஜீத் மண்டபத்தில் விவசாய அமைப்புப் பிரதிநிதிகளை அரச அதிபர் தலைமையில் சந்தித்து கலந்துரையாடல் நடத்தி கடந்த முதலாம் திகதி நீர் விநியோகம் செய்வதென்றும் 10ஆம் திகதிக்கு முன்னர் விதைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் தீர்மானம் எடுத்தோம். அதனடிப்படையில் கடந்த முதலாம் திகதிமுதல் நீர்ப்பாசனத் திணைக்களம் நீர் விநியோகத்தை மேற்கொண்டிருந்தும் எரிபொருள் இல்லாத காரணங்களை காட்டி விதைப்பு நடவடிக்கைகளை விவசாயிகள் மேற்கொள்ளவில்லை. அதன் காரணமாக விவசாயிகளின் வேண்டுகோளின் பிரகாரம் நீர் விநியோகத்தை தடைசெய்துள்ளோம்.

மீளவும் கடந்த நான்காம் திகதி மீண்டும் கூட்டமொன்றை கூட்டி கலந்துரையாடி கடந்த ஐந்தாம் திகதிமுதல் மீள நீர் விநியோகம் செய்ய தீர்மானித்தோம். அதனிடையே போதியளவு மழை கிடைத்தமையினால் நீர் விநியோகத்தில் எவ்வித குறைபாடுகளுமின்றி எந்தநேரத்திலும் நீரை விநியோகிக்கத் தயாராக உள்ள சூழ்நிலையிலும்கூட வெயில்காலம் என்றபடியினால் குடிநீர், விவசாயம், கரும்புச் செய்கைக்கு போதுமான நீர் மட்டுமே கைவசம் உள்ளது. எரிபொருள் பெற்றுக்கொள்வதில் உள்ள பிரச்சினைகள் காரணமாக விதைப்பு நடவடிக்கைகள் இன்னும் ஆரம்பிக்கப்படாமல் இருப்பது பின்நாட்களில் பல்வேறு சிக்கல்களை தோற்றுவிக்கும் வாய்ப்புள்ளது. ஒருசிலருக்காக மட்டும் நீரை திறந்துவிட்டு நீரை வீண்விரயம் செய்யமுடியாத நிலை நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு உள்ளது.

24 ஆயிரம் ஏக்கர் பரப்பளவுகொண்ட சம்மாந்துறை பிரதேசத்தில் விவசாயிகளும், உழவு இயந்திரக்காரர்களும் சமூகநல சிந்தனையுடன் செயற்பட்டு மக்களின் பசியாற்றும் விவசாயத்தின் தேவையறிந்து உடனடியாக விதைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் எரிபொருள் பிரச்சினைகளைத் தீர்க்க எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களுடன் பேசியதில் வீடுகளில் எரிபொருள் சேமிக்கப்படுவதனாலேயே இந்த நிலை உள்ளதாக தெரிவிக்கின்றனர். மட்டுக்கு மட்டாக நீர் கைவசமிருப்பதனால் விவசாயிகள் காலஅட்டவணையை சரியாக பயன்படுத்தி உடனடியாக விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - என்று கேட்டுக்கொண்டார்.

## போழியார் புலம்பல்!



அமைச்சர் மார மாத்தினால்
நாட்டுப்பஞ்சம் தீருமடா சாமி..
இருட்டு இல்லாம போகுமடா
கியூவில நின்று எரிபொருள்
வாங்கிற வேல குறையுமடா..
கோட்டாவும் மகிந்தவும் மாறாம
ஒண்டுமே சரிவாரீது எலுவா அதுசரி
காலிமுத்திடலில கூத்துக்காட்டிற
சிங்கள மக்கள் மறுகா என்ன
செய்யப்போறாங்க எண்டதப் பாப்பம்!

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# சீனக்குடா கொட்பே துறைமுகத்தில் ஆணொருவரின் சடலம் மீட்பு



(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்பே மீன்பிடித் துறைமுகத்தில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சடலம் கடந்த வெள்ளிக்கிழமை (15) மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் அம்பலாங்கொட - பின்னதுவ பகுதியைச் சேர்ந்த மல்நெய்து மானவடுகே சமிந்த பிரியந்த (35 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

காலி பிரதேசத்திலிருந்து ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கைக்காக IMULA 2190 என்ற படகின் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டவரே உயிரிழந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது சம்பவ இடத்தில் உள்ளதாகவும் நீதவான் பரிசோதனையின் பின்னர் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்படவுள்ளதாகவும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் சீனக்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

# ஆனைப்பந்தி ஸ்ரீ சித்தி விக்னேஸ்வரர் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா





(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் புகழ்பெற்ற ஆலயங்களுள் ஒன்றாகத் திகழும் புளியந்தீவில் அமைந்துள்ள ஆனைப்பந்தி ஸ்ரீ சித்தி விக்னேஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவத்தின் தேர்த்திருவிழாவானது மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

2022.04.07ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்ட ஆலய வருடாந்த உற்சவத்தில் கடந்த 11ஆம் திகதி மாம்பழத் திருவிழா, 14ஆம் திகதி திருவேட்டைத் திருவிழா போன்ற சிறப்பு பூசைகள் இடம்பெற்றிருந்தன.

உற்சவத்தின் 09ஆம் நாளான நேற்று முன்தினம் தேர்த்திருவிழாவானது பெருமளவு மக்களின் பங்கேற்புடன் வெகு சிறப்பாக இடம்பெற்றது. ஆரம்ப பூசை வழிபாடுகள், சிறப்பு வாத்திய, நாட்டிய நிகழ்வுகள், தேவார பாராயணங்கள் இடம்பெற்று விக்னேஸ்வரப் பெருமான் உள்வீதி வலம் வந்து அலங்காரத் தேரில் அமர்ந்து பக்த அடியார்களின் அரோகரா முழக்கத்துடன் வடமிழுக்க வெளிவீதி வலம் வந்து அருள் வழங்கும் காட்சி மிக அற்புதமாக இடம்பெற்றது.

தொடர்ந்து நேற்று முன்தினம் 2022.04.16ஆம் திகதி சித்திரைப் பௌர்ணமி தினத்தில் ஆனைப்பந்தி ஆலயத்திலிருந்து மாமாங்கேஸ்வரர் ஆலயம் சென்று அங்கு தீர்த்தோற்சவம் இனிதே நிறைவுபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# மட்டு. கொக்குவிலில் வீடொன்றின் யன்னலை உடைத்து 95 ஆயிரம் ரூபா பணத்துடன் 5 உண்டியல்கள் கொள்ளை

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள நாவற்கேணி பிரதேசத்திலுள்ள வீடொன்றிலிருந்து 5 உண்டியல்களை திருடி எடுத்துக்கொண்டு அருகிலுள்ள வெற்றுக்காணியில் வைத்து அதனை உடைத்து அதிலிருந்த சுமார் 95 ஆயிரம் ரூபா பணத்தை கொள்ளையிட்டுச் சென்ற சம்பவம் கடந்த வியாழக்கிழமை (14) இரவு இடம்பெற்றுள்ளதாக கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

நாவற்கேணி புதிய எல்லை வீதி 4ஆம் குறுக்கு வீதியிலுள்ள குறித்த வீட்டின் குடும்பத்தினர் ஆளுக்கு ஒரு உண்டியல் வீதம் 5 உண்டியல்களில் தினமும் நூறு ரூபா வீதம் சுமார் 95 ஆயிரம் ரூபாவரை சேமித்து வந்துள்ள நிலையில், சம்பவதினமான நேற்று இரவு 8.30 மணிக்கு அனைவரும் நித்திரைக்குச் சென்ற நிலையில் இரவு 11 மணிக்கு தண்ணீர் குடிப்பதற்காக வீட்டின் உரிமையாளர் நித்திரையிலிருந்து எழுந்து சமையல் அறைக்குச் சென்றபோது அங்கிருந்த ஜன்னல் உடைக்கப்பட்டு வீட்டின் மண்டபத்தில் தொலைக்காட்சி பெட்டிக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த 5 உண்டியல்கள் திருட்டுப்போயுள்ளமை தெரியவந்தது.

பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, திருட்டுப்போன வீட்டிற்கு அருகிலுள்ள வெற்றுக்காணியில் 3 உண்டியல்கள் உடைக்கப்பட்டு பணம் கொள்ளையடிக்கப்பட்ட நிலையில் வெறும் உண்டியல்களை பொலிஸார் மீட்டதுடன், ஏனைய இரு உண்டியல்களை பணத்துடன் கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்குவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஏறாவூரில் போதைப்பொருட்களுடன் 4 பேர் கைது

(கனகராசா சரவணன்)

ஏறாவூரில் ஹெரோயின் மற்றும் கஞ்சாவுடன் 4 பேரை கடந்த வெள்ளிக்கிழமை (15) கைதுசெய்ததுடன், ஹெரோயின, கஞ்சா மற்றும் ஒரு மோட்டார்சைக்கிள், ஒரு துவிச்சக்கரவண்டி என்பனவற்றை மீட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து சம்பவதினத்தன்று பகல் ஏறாவூர் பொலிஸ் நிலையப் பெரும் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் ஏறாவூர் பகுதியிலுள்ள குறித்த பகுதி வீதியில் கண்காணிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது ஹெரோயினை எடுத்துக்கொண்டுசென்ற ஒருவரை மடக்கிப்பிடித்து கைதுசெய்ததுடன், அவரிடமிருந்து 130 மில்லிகிராம் ஹெரோயினையும் மீட்டனர்.

இதனைத் தொடர்ந்து மயிலம்பாவெளி பகுதி வீதியில் மோட்டார்சைக்கிள் மற்றும் துவிச்சக்கரவண்டியில் பிரயாணித்த மட்டக்களப்பு கல்லடி பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரை கைதுசெய்ததுடன், அவரிடமிருந்து ஆயிரம் மில்லிகிராம் கஞ்சாவையும், மோட்டார்சைக்கிளில் பிரயாணித்த மட்டக்களப்பு நாவற்கேணி மற்றும் மயிலம்பாவெளி பிரதேசத்தைச் சேர்ந்த இருவரை கைதுசெய்ததுடன் அவர்களிடமிருந்து 2 ஆயிரத்து 50 மில்லிகிராம் கஞ்சாவையும் ஒரு மோட்டார்சைக்கிள், ஒரு துவிச்சக்கரவண்டியையும் மீட்டனர்.

இதில் கைதுசெய்யப்பட்ட 4 பேரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்

# அம்பாறை மாவட்டத்தில் 3.6 மில்லியன் ரூபா பெறுமதியான பேரீச்சம்பழம் விநியோகம்!




(மாளிகைக்காடு நிருபர்)

அம்பாறை மாவட்ட மக்களுக்கு புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு பேரீச்சம்பழப் பொதி வழங்கும் செயற்றிட்டம் தொடர்ந்து மூன்றாவது வருடமாக இவ்வாண்டும் கல்முனையன்ஸ் போரமினால் கடந்த வெள்ளிக்கிழமை (15) உத்தியோகபூர்வமாக கல்முனையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

கல்முனையன்ஸ் போரமானது விடுத்த வேண்டுகோளுக்கமைய 3.6 மில்லியன் ரூபா பெறுமதியான 6000 கிலோகிராம் பேரீச்சம்பழத் தொகுதியினை பெஸ்ட் பூட் மார்க்கெட்டிங் பிரைவேட் லிமிட்டெட் நிறுவனத்தினர் நன்கொடையாக வழங்கியிருந்தனர். குறித்த நிறுவனமானது கடந்த ஆண்டு 8.5 தொன் பேரீச்சம்பழத் தொகுதியினை வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

இப்பேரீச்சம்பழமானது அம்பாறை மாவட்டத்திலுள்ள சகல பிரதேசங்களில் இருந்தும் தெரிவுசெய்யப்பட்ட தொண்டர் அமைப்புகளூடாகவும், பள்ளிவாசல் நிர்வாகத்தினரூடாகவும் இனங்காணப்பட்ட பயனாளிக் குடும்பங்களுக்கு விநியோகிக்கப் படவிருக்கின்றன.




நிகழ்வில் அம்பாறை மாவட்ட பிரதேசங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட தொண்டர் அமைப்புகளின் பிரதிநிதிகள், பள்ளிவாசல் நிர்வாகத்தினர் மற்றும் கல்முனையன்ஸ் போரத்தின் அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# மட்டக்களப்பு பனிச்சையடி காட்டுப்பகுதியில் கைக்குண்டு மீட்பு



(கனகராசா சரவணன்)

மட்டக் களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள பனிச்சையடி பிரதேசத்தி லுள்ள பிரம்பு காட்டுப்பகுதியில் கைவிடப்பட்டிருந்த கைக்குண்டு ஒன்றை நேற்று முன்தினம் (16) பிற்பகல் மீட்டுள்ளதாக கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

விசேட புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து சம்பவ தினத்தன்று பிற்பகல் 3 மணியளவில் கொக்குவில் பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் பனிச்சையடி பகுதியிலுள்ள பிரம்பு காட்டுப்பகுதியில் கைவிடப்பட்ட கைக்குண்டு ஒன்றை மீட்டனர்.

குறித்த குண்டு பழுதடைந்துள்ளதால் நீதிமன்ற அனுமதியைப் பெற்று செயலிழக்க செய்வதற்கான நடவடிக்கையினை மேற்கோண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# கோழிக் கழிவுகளை வீதியில் வீசமுயன்ற இருவர் பொதுமக்களால் மடக்கிப்பிடிப்பு

(வெல்லாவெளி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துறைநீலாவணைக்குச் செல்லும் பிரதான வீதியில் நேற்று முன்தினம் (16) காலை 10.15 மணியளவில் மருதமுனையைச் சேர்ந்த இருவர் அறுக்கப்பட்ட கோழிகளின் கழிவுகளை பொலித்தீன் பைகளில் இட்டு அதனை சூட்சுமமாக ஏற்றிக்கொண்டு முச்சக்கரவண்டியில் துறைநீலாவணை பாதையில் அதிரடியாக வீசினார்கள்.




இவர்களை பின்தொடர்ந்த துறைநீலாவணையைச் சேர்ந்த இளைஞர் குழாம், பொதுமக்கள் ஒன்றிணைந்து பின்தொடர்ந்து கையும்மெய்யுமாக பிடித்துள்ளனர். அவர்களை இனிமேல் வீசக்கூடாது என எச்சரித்துள்ளதுடன், இருவரும் கொண்டுவந்த கழிவுகளை மீண்டும் முச்சக்கரவண்டியில் ஏற்றி அனுப்பியுள்ளதுடன், எதிர்வரும் காலங்களில் துறைநீலாவணை பாதையில் கோழிக் கழிவுகளையோ அல்லது இறைச்சிக்காக வெட்டப்படும் கழிவுகளையோ அல்லது வேறு கழிவுப்பொருட்களை வீசினால் நீங்கள்தான் பொறுப்பென்றும், தங்களுக்கு எதிராக பாரபட்சமின்றி நடவடிக்கை எடுப்போம் எனவும் இளைஞர் குழாத்தினரும், பொதுமக்களும் எச்சரித்து அனுப்பியுள்ளனர்.

இவ்விடயமாக பிரதேசத்திற்குப் பொறுப்பான களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர், களுதாவளை பிரதேச சபை தவிசாளர் மற்றும் செயலாளர், துறைநீலாவணைக்கான பிரதேச சபை உறுப்பினர், களுவாஞ்சிக்குடி சுற்றாடல் பொறுப்பதிகாரி, துறைநீலாவணை தெற்கிற்கான கிராமசேவையாளர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் போன்றோருக்கு தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு தகவல்களை தெரிவித்துள்ளனர்.

# இந்திய செய்திகள்

## டில்லி ஹனுமன் ஜெயந்தி ஊர்வலத்தில் மோதல்; 14 பேர் கைது




டில்லியில் ஹனுமன் ஜெயந்தி ஊர்வலத்தில் நடந்த வன்முறை சம்பவம் தொடர்பாக இதுவரை 14 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

டில்லியில் ஜஹாங்கிர்புரி பகுதியில் நேற்று முன்தினம் (16ஆம் திகதி) நடந்த ஹனுமன் ஜெயந்தி ஊர்வலத்தில் பங்கேற்றோர் மீது, மற்றொரு தரப்பினர் கல்வீச்சில் ஈடுபட்டதால் வன்முறை ஏற்பட்டது. இச்சம்பவத்தில் பல வாகனங்கள் மர்ம நபர்களால் அடித்து நொறுக்கப்பட்டன. கலவரத்தின்போது அங்கு பாதுகாப்பிற்கு வந்த பொலிஸார் அவர்களைக் கட்டுப்படுத்தினர். கல்வீச்சில் பொலிஸார் உட்பட பலர் காயமடைந்தனர். கலவரத்தையொட்டி அப்பகுதியில் பரபரப்பான சூழல் நிலவியது.

இந்த வன்முறை குறித்து மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, டில்லியின் உயர் பொலிஸ் அதிகாரிகளை உடனடியாகத் தொடர்பு கொண்டு வன்முறையை கட்டுப்படுத்த உத்தரவிட்டார். மேலும், வன்முறை தொடர்பாக விசாரணை நடத்த தனிக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், வன்முறை குறித்து இதுவரை 14 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## இந்தியா - சீனா இடையே நீடிக்கும் எல்லைப் பிரச்சினை



இந்தியாவுடனான எல்லைப் பிரச்சினை நீடித்து வரும் நிலையில், லடாக்கில் எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு மிக அருகே சீனா கைபேசிக் கோபுரங்கள் அமைத்து வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 2020ஆம் ஆண்டு இந்திய - சீன இராணுவத்தினர் இடையே ஏற்பட்ட மோதல் சம்பவத்தைத் தொடர்ந்து, இதுவரை இரு நாடுகளிடையே 15 கட்டப் பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ள நிலையிலும், எல்லைப்பகுதியில் சீனா அவ்வப்போது அத்துமீறி வருகிறது.

சில நாட்களுக்கு முன்னர் பெங்கொங் ஏரிப் பகுதியில் சட்டவிரோதமாகப் பாலம் கட்டி வந்த சீனா, பாலப் பணிகள் முடிவடைந்ததை அடுத்து, தற்போது கைபேசிக் கோபுரங்கள் அமைத்து வருவதாகக் கூறப்படுகிறது.

இந்திய எல்லைக்கு மிக அருகே அசல் எல்லை கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து கிழக்கே 8 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள சூசுல் என்ற பகுதியில் மூன்று கைபேசிக் கோபுரங்களை சீனா அமைத்து வருவதாக சொல்லப்படுகிறது.

## இரண்டு நாள் பயணமாக இந்தியா வருகிறார் பிரித்தானிய பிரதமர் பொரிஸ் ஜோன்சன்

### 22இல் பிரதமர் மோடியுடன் பேச்சு




பிரித்தானிய பிரதமர் பொரிஸ் ஜோன்சன் இந்தியாவுக்கு வரவுள்ளார். இரண்டு நாட்கள் பயணமாக எதிர்வருகிற 21ஆம் திகதி இந்தியாவுக்கு வரவுள்ள அவர் பிரதமர் நரேந்திர மோடியை 22ஆம் திகதி சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

பிரித்தானியப் பிரதமராக பொறுப்பேற்ற பிறகு பொரிஸ் ஜோன்சன் இதற்கு முன் இருமுறை இந்தியா வரத் திட்டமிட்டிருந்தார். ஆனால், கொரோனா காரணமாக இருமுறையும் அவரது பயணம் இரத்து செய்யப்பட்டது. இந்த ஆண்டு குடியரசு தின விழாவிலும் சிறப்பு விருந்தினராக பொரிஸ் ஜோன்சன் பங்கேற்க இருந்த நிலையில், கொரோனா பரவல் காரணமாக அந்தத் திட்டம் இரத்தானது.

இந்நிலையில், எதிர்வருகிற 21, 22 ஆகிய திகதிகளில் இரண்டு நாட்கள் பயணமாக பொரிஸ் ஜோன்சன் இந்தியாவுக்கு வரவுள்ளார்.

21ஆம் திகதி குஜராஜ் மாநிலம் அஹமதாபாத்திற்கு வரும் பொரிஸ் ஜோன்சன், முன்னணி வர்த்தக நிறுவனங்களின் தலைவர்களை சந்தித்துப் பேசுகிறார். அப்போது, இந்தியாவிலுள்ள முக்கிய தொழில்களில் பெரிய அளவில் முதலீடு செய்வதற்கான அறிவிப்பையும் ஜோன்சன் வெளியிடுவார் என தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு இரு நாடுகளுக்குமிடையே தடையில்லா வர்த்தக ஒப்பந்தமும் கையெழுத்தாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், இந்தியா - பிரித்தானியா இடையேயான வர்த்தகத்தை 2035 ஆம் ஆண்டிற்குள் ஆண்டுக்கு 37 பில்லியன் டொலராக அதிகரிப்பது குறித்தும் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.

இதனையடுத்து 22ஆம் திகதி பொரிஸ் ஜோன்சன், பிரதமர் நரேந்திர மோடியை டில்லியில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

அப்போது, பாதுகாப்புத்துறை, பொருளாதாரம், எரிசக்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து இரு நாட்டுத் தலைவர்களும் ஆலோசனை நடத்துவார்கள் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், ஆசிய பசுபிக் நாடுகளில் பாதுகாப்பு ஒத்துழைப்பை இருதரப்பிலும் வலுப்படுத்துவது குறித்தும் பொரிஸ் ஜோன்சனும், நரேந்திர மோடியும் விவாதிக்கத் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அதேபோல், உக்ரைன் போர் குறித்தும் இருநாட்டுத் தலைவர்களும் ஆலோசிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. உக்ரைன் - ரஷ்யா விவகாரத்தில், இந்தியா நடுநிலை நிலைப்பாட்டுடன் இருக்கும் நிலையில், பிரித்தானியா உக்ரைனுக்கு ஆதரவு அளித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இமாச்சல பிரதேசம் - லடாக் இடையிலான உலகின் உயரமான சுரங்க வழிப்பாதை



இமாச்சல பிரதேசம் - லடாக்கை இணைக்கும் உலகின் உயரமான சுரங்க வழிப்பாதை அமைக்கப்படவுள்ளது.

ஷிங்கு லா மலைப்பாதை வழியாக 16ஆயிரத்து 580 அடி உயரத்தில் இமாச்சல பிரதேசம் மற்றும் லடாக்கை இணைக்கும் சுரங்க வழிப்பாதையை அமைக்கும் 'பிரொஜக்ட் யோஜக்' திட்டத்திற்கு இந்திய மத்திய அரசு அனுமதியளித்துள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு 2025ஆம் ஆண்டு சுரங்க வழிப்பாதை முழுமை பெறும் என எல்லைச் சாலைகள் அமைப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த சுரங்கப் பாதையின் மூலம் கார்கில் பகுதியை ஒட்டியுள்ள சான்ஸ்கரின் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## அதிக ஓவியங்கள் வரைந்து உலக சாதனை



ஒடிசாவைச் சேர்ந்த இரண்டரை வயதுக் குழந்தை, 'அதிகபட்ச ஓவியங்களை வரைந்த குழந்தை' என்ற உலக சாதனையைப் படைத்துள்ளது. ஒடிசா மாநிலம் புவனேஸ்வரைச் சேர்ந்த இரண்டரை வயதுக் குழந்தையான அன்வி விஷேஷ் அகர்வால். 9 மாதக் குழந்தையாக இருந்தபோதே வரையத் தொடங்கியுள்ளது. இதுவரை 72 ஓவியங்கள் வரைந்து 'அதிகபட்ச ஓவியங்களை வரைந்த குழந்தை' என்ற உலக சாதனையைப் படைத்துள்ளது. இது தவிர அன்வி, ஒரு வயது, ஒன்பது மாதக் குழந்தையாக இருந்தபோது, அந்நிய மொழியான ஸ்பானிஷ் மொழியின் 42 உச்சரிப்புகளைப் பேசி இந்திய சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும், லண்டன் மற்றும் இந்தியா புக் ஒவ் ரெக்கார்டிலும் இந்தக் குழந்தை இடம்பெற்றுள்ளது.

## ஹட்டனிலிருந்து கொழும்புக்கு போதிய பஸ் இன்மையினால் பயணிகள் அசௌகரியம்





*(மனுர சுதத் செல்லஹேவா)*

தமிழ், சிங்கள புதுவருடப் பிறப்பை முன்னிட்டு கொழும்பிலிருந்து ஹட்டன் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளுக்கு வருகை தந்திருந்த மக்கள், மீண்டும் கொழும்பை நோக்கிப் பயணிக்கத் தேவையான பஸ்கள் இல்லாமையினால் அவர்கள் பெரும் அசௌகரியத்தை எதிர்கொண்டிருந்தனர்.

கொழும்பை நோக்கிப் பயணிக்கத் தேவையான பஸ்கள் இல்லாமையினால் பல மணிநேரம் வரிசையில் காத்திருக்க வேண்டியேற்பட்டதாகவும், இதனால் பெரும் அசௌகரியத்தை எதிர்கொண்டதாகவும் பயணிகள் தெரிவித்திருந்தனர்.

ஹட்டன் டிப்போவினூடாக 25 – 30 நிமிடங்களுக்கு ஒருமுறை கொழும்புக்கு பஸ் போக்குவரத்து சேவையை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஹட்டன் டிப்போ அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இருந்தபோதிலும், வருகை தந்திருந்த பயணிகளின் எண்ணிக்கைக்கமைய, அந்த பஸ் போக்குவரத்துச் சேவை போதாது என்றும், இந்த நிலைமை தொடர்பில் கவனம் செலுத்தி பிரயாணிகளுக்கான போக்குவரத்து வசதிகளுக்காக வெளிப் பிரதேசங்களிலுள்ள டிப்போக்களிலிருந்து பஸ்களை வரவழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

## ஜெனரேட்டர் வெடித்து தாயும் மகளும் பலி



*(ஹாலிஎல நிருபர்)*

மின்துண்டிப்பு அமுல்படுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் இயக்கத்திலிருந்த ஜெனரேட்டர் வெடித்து சிதறிய சம்பவம் வெலிமடை பிரதேசத்தில் அண்மையில் பதிவாகியிருந்தது.

இந்த சம்பவத்தில் பலத்த தீக்காயங்களுக்குள்ளான நிலையில், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த தாயும், மகளும் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

38 வயதுடைய தாயும், அவரது 10 வயது மகளுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனார். வெலிமடை, கெப்பட்டிபொல பிரதேசத்தில் வசித்து வந்த இரண்டு குழந்தைகளைக் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்த தாய், மகள் மற்றும் மகன் ஆகியோர் பலத்த தீக்காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

இந்த வெடிப்புச் சம்பவத்தில் வீட்டின் பெரும்பகுதி எரிந்து சாம்பலாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். தீ விபத்தில் சிக்கிய தாய் பலத்த தீக்காயங்களுடன் பதுளை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்ததுடன், கொழும்பு லேடி ரிஜ்வே வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த 10 வயது சிறுமி உயிரிழந்துள்ளார். இறுதிக்கிரியைகள் நேற்று முன்தினம் (16) கெப்பட்டிபொலவில் இடம்பெற்றன.

## அரசாங்கத்தைப் பதவி விலகக் கோரி ஹட்டனில் அரச சார்பற்ற அமைப்புகள் ஆர்ப்பாட்டம்






ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட அரசாங்கம் பதவி விலக வேண்டும் எனக் கோரி ஹட்டன் நகரில் நேற்று (17) ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

பெருந்தோட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரச சார்பற்ற அமைப்புகள் ஒன்றிணைந்து இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தன.

குறித்த பிரதேசத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக ஹட்டன் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

# மலையக செய்திகள்

thamilanmalayagam@gmail.com

## பெல்மதுளை ரஜ மகா விகாரையில் இடம்பெற்ற எண்ணெய் வைக்கும் நிகழ்வு



*(இரத்தினபுரி நிருபர்)*

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு எண்ணெய் வைக்கும் நிகழ்வு பெல்மதுளை ரஜ மகா விகாரையில் நேற்று (17) இடம்பெற்றது.

சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவின் ஆலோசனைக்கமைய மேற்படி விகாரையில் இடம்பெற்ற எண்ணெய் வைக்கும் நிகழ்வில், சிவனொளிபாதமலை ஸ்தல தலைவரும், பெல்மதுளை ரஜ மகா விகாரையின் விகாராதிபதியுமான வணக்கத்துக்குரிய பெங்கமுவே தம்மதின்ன நாஹிமி தலைமையில் வழிபாட்டு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதன்போது சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் சுனில் ஜயலத், இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலணி லொக்குபோத்தாகம, மாகாண ஆளுநரின் இணைப்பு செயலாளர் மஞ்சுளா இதிகாவெல உட்பட அரச அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.



## இன்று 54ஆவது நாளாகவும் தொடரும் போர்:

# ஒரே நேரத்தில் உக்ரைனின் 8 நகரங்கள் மீது ரஷ்யா தாக்குதல்

• வெடித்துச் சிதறியது எண்ணெய் ஆலை

• பெலாரஸ் நாடுகளின் வணிக போக்குவரத்திற்கு தடை

• பிரிட்டன் பிரதமர் உட்பட 13 பேருக்கு ரஷ்யா தடை







உக்ரைன் மீதான ரஷ்யத் தாக்குதல் இன்று 54ஆவது நாளாகவும் தொடர்கிறது. இந்நிலையில், தற்போது மீண்டும் ரஷ்யா, உக்ரைன் மீதான தாக்குதலை உக்கிரப்படுத்தியுள்ளது. கருங்கடலில் நிறுத்தப்பட்டிருந்த ரஷ்யாவின் மிகப்பெரிய போர்க்கப்பல் மீது தாக்குதல், எல்லைக்குள் புகுந்து குடியிருப்புகள் மீது உக்ரைன் இராணுவம் குண்டு மழை பொழிந்ததால், ஆத்திரமடைந்த ரஷ்யா, தலைநகர் கீவ் உள்ளிட்ட 8 நகரங்கள் மீது அதிரடித் தாக்குதலை நடத்தியுள்ளது.

உக்ரைன் நேட்டோ அமைப்பில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி போர் தொடுத்த ரஷ்யா, இன்று 54ஆவது நாளாகவும் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில், கிழக்குப் பகுதியிலுள்ள டார்னிட்ஸ்கி மாவட்டத்தில் அதிகாலை தாக்குதல் நடத்தப்பட்டது. ரஷ்யப் படைகளின் தாக்குதல் தீவிரமடைவதால், தலைநகரை விட்டு வெளியேறியவர்கள் தங்கள் பாதுகாப்பிற்காக இப்போது திரும்பவேண்டாம் என்று மேயர் எச்சரித்துள்ளார்.

கிரோவோஹ்ராட் பிராந்தியத்திலுள்ள ஒலெக்சாந்திரியாவிலுள்ள விமானநிலையத்தின் மீது ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல் நடத்தியுள்ளது. லுஹான்ஸ்க் பிராந்தியத்தில் நடந்த குண்டுவீச்சில் ஒருவர் கொல்லப்பட்டார். குண்டுவீச்சால் செவரோடோனெட்ஸ்க் மற்றும் லிசிசான்ஸ்க் நகரங்களில் எரிவாயு குழாய்களும் சேதமடைந்தன. மரியுபோலில் தொடர் போர் நடைபெற்றுவருகிறது. கார்கிவ்வில், குடியிருப்புப் பகுதி மீது நடத்தப்பட்ட குண்டுவீச்சு தாக்குதலில் 7 மாத குழந்தை உட்பட 7 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 34 பேர் காயமடைந்தனர்.

ரஷ்ய இராணுவம் வெளியேறிய கீவ்வில் சுமார் 900 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மரியுபோலிலும் பொதுமக்கள் கொல்லப்பட்டு புதைக்கப்பட்ட சடலங்களை ரஷ்ய இராணுவம் தோண்டி எடுப்பதை மக்கள் பார்த்துள்ளனர்.

ரஷ்யா நேற்றுமுன்தினம் மட்டும் கிழக்கு உக்ரைனிலுள்ள டோனெட்ஸ்க், லுஹான்ஸ்க், கார்கிவ், மத்திய உக்ரைனில் டினிப்ரோபெட்ரோவ்ஸ்க், பொல்டாவா, கிரோவோஹ்ராட் மற்றும் தெற்கில் மைக்கோலைவ், கெர்சன் ஆகிய நகரங்களை குறிவைத்து ஏவுகணை மற்றும் குண்டு பொழிந்தது. லிசிசான்ஸ்க் நகரிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் ரஷ்யப் படைகள் குண்டு வீசி தாக்குதல் நடத்தின. இதில் ஆலை வெடித்து சிதறி பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. அத்தோடு கார்கிவ் மற்றும் புறநகர்ப் பகுதியில் 11 பேர் உயிரிழந்துள்ளனர். 50இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். தெற்கு மைக்கோலைவ்வில் வான்வழித் தாக்குதல்களில் ஐந்து பேர் கொல்லப்பட்டனர். 15 பேர் காயமடைந்தனர்.

இதுகுறித்து உக்ரைன் துணைப் பிரதமர் இரினா வெரேஷ்சுக் தெரிவிக்கையில், ''700 உக்ரைன் வீரர்கள், 1,000இற்கும் மேற்பட்ட பொதுமக்கள், 500இற்கும் மேற்பட்ட பெண்கள் ரஷ்யர்களால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளனர். உக்ரைன் அதே எண்ணிக்கையிலான ரஷ்ய வீரர்களை சிறைப்பிடித்து வைத்திருப்பதால், 'எந்தவித நிபந்தனையுமின்றி' பொதுமக்களை விடுவிக்க கோரிக்கை வைக்கப்பட்டுள்ளதால், சிறைப்பிடிக்கப்பட்ட வீரர்களை மாற்றிக் கொள்ள உக்ரைன் முடிவு செய்துள்ளது'' - என்றார்.

**பெலாரஸ் நாடுகளின் வணிக போக்குவரத்திற்கு தடை**

உக்ரைன் போர் விவகாரத்தால் தடைசெய்யப்பட்ட ரஷ்ய மற்றும் பெலாரஸ் நாடுகளின் சரக்கு லொறிகள், போக்குவரத்து அனுமதிக்காக போலந்து எல்லையில் பல கிலோமீற்றர் தூரத்திற்கு நீண்ட வரிசையில் காத்திருக்கின்றன.

ரஷ்யா மற்றும் பெலாரஸ் நாடுகளுடன் எல்லையை பகிர்ந்துகொள்ளும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், இரு நாடுகளின் சரக்கு வாகனங்களுக்கு தடை விதித்துள்ளன. இதனால் போலந்து எல்லையான Kukuryk-Kozlovichi பகுதியில் நீண்ட தூரத்திற்கு லொறிகள் அணிவகுத்து நிற்கின்றன.







எளிதில் கெடக்கூடிய உணவுப் பொருட்கள், மருந்து விநியோகம் உள்ளிட்ட பல்வேறு சேவைகள் அனுமதி மறுப்பு காரணமாக தடைப்பட்டுள்ளதாக சாரதிகள் தெரிவித்துள்ளனர்.

**பிரிட்டன் பிரதமர் உட்பட 13 பேருக்கு ரஷ்யா தடை**

உக்ரைன் மீது படையெடுத்த ரஷ்யா மீது அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட உலக நாடுகள் கடுமையாக பொருளாதார தடைகளை விதித்துள்ளன. உக்ரைனுக்கு தொடர்ந்து ஆயுத உதவிகளையும் அளித்து வருகின்றன. இதனால் கோபமடைந்துள்ள ரஷ்யா, பிரித்தானிய பிரதமர் பொரிஸ் ஜோன்சன், துணைப் பிரதமர் டொமினிக் ரொப், நிதியமைச்சர் ரிஷி சுனாக் உட்பட 13 பேர் தனது நாட்டுக்குள் நுழைய தடை விதித்தது.

**உக்ரைன் பிரதமர் அமெரிக்கா பயணம்**

வொஷிங்டனில் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி அடுத்த வாரம் நடத்தும் வசந்தகால கூட்டத்தில் உக்ரைன் பிரதமர் டெனிஸ் ஷ்மிஹால், நிதி அமைச்சர் செர்ஹி மார்சென்கோ மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் கிரிலோ ஷெவ்செங்கோ ஆகியோர் பங்கேற்கிறார்கள். இந்தக் கூட்டத்தில் ரஷ்ய படையெடுப்பால் உலக பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள தாக்கம் குறித்து விவாதிக்கப்படுகிறது.

**3,000 உக்ரைன் வீரர்கள் உயிரிழப்பு**


உக்ரைன் மீதான ரஷ்யப் படைகளின் தாக்குதலில், சுமார் 3 ஆயிரம் உக்ரைன் இராணுவ வீரர்கள் உயிரிழந்ததாக அந்நாட்டு ஜனாதிபதி ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஸெலென்ஸ்கி மேலும் தெரிவிக்கையில்,

போரில் சுமார் 10 ஆயிரம் வீரர்கள் காயமடைந்துள்ளனர். அவர்களுள் எத்தனை பேர் உயிர் பிழைப்பார்கள் என்று சொல்வது கடினம். போதுமான தகவல்கள் இல்லை என்பதால், பொதுமக்கள் எத்தனை பேர் கொல்லப்பட்டனர் என்பதை சொல்வதும் கடினம் என்றார்.

போரில் 14 ஆயிரம் உக்ரைன் வீரர்கள் கொல்லப்பட்டதாகவும் 16 ஆயிரம் பேர் காயமடைந்ததாகவும் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு கடந்த மார்ச் மாதம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முதுமையின் தள்ளாட்டம்: காற்றுடன் கைகுலுக்கிய பைடன்



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கு தற்போது 79 வயதாகிறது. முதுமையின் தள்ளாட்டம் சில நேரங்களில் அவரை காட்டிக் கொடுத்துவிடும். இந்நிலையில், அவர் குழப்பத்தில் காற்றுடன் கைகுலுக்கிய சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

வடக்கு கெரோலினா மாகாணத்துக்கு சென்ற பைடன், அங்குள்ள கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு 40 நிமிடங்கள் நின்றபடியே உரையாற்றினார். தனது உரையை முடித்து திரும்பிய அவர், தனக்கு பின்னால் அதிகாரிகள் நிற்கிறார்கள் என்ற நினைப்பில் அவர்களுடன் கைகுலுக்க கையை நீட்டினார்.

ஆனால், அவரைச் சுற்றி ஒருவரும் இல்லை. சிறிதுநேரம் குழப்பத்தில் கையை நீட்டியபடியே நின்று, சுற்றும்முற்றும் பார்த்தார். ஒன்றும் புரியாமல் அவர் குழப்பத்தில் நின்றார். எந்தப் பக்கம் போவதென்றும் தெரியாமல் திகைத்து நின்றார். சிறிதுநேரத்தில் சுதாரித்துக்கொண்டு மேடையை விட்டு இறங்கிச் சென்றார். இந்த வீடியோ காட்சி, சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளது. ஒரேநாளில் கோடிக்கும் மேற்பட்டோர் இதை பார்த்துள்ளனர். அந்தக் காட்சி வேதனையளிப்பதாக பலர் நெகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளனர்.

## அமெ. - பிரிட்டானில் கல்லீரலை தாக்கும் மர்மநோயால் குழந்தைகள் பாதிப்பு

**நோயின் தாக்கம் அதிகரிக்கக்கூடும் என உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை**

அமெரிக்கா, பிரித்தானியா, ஸ்பெயின், அயர்லாந்து ஆகிய நாடுகளில் குழந்தைகளின் கல்லீரலை தாக்கும் மர்மநோய் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ள நிலையில், எதிர்வரும் நாட்களில் நோயின் தாக்கம் அதிகரிக்கக்கூடும் என உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஒன்று முதல் ஆறு வயதுடைய குழந்தைகளை தாக்கும் அந்நோய், பிரித்தானியாவில் 74 பேருக்கும், அமெரிக்காவில் 9 பேருக்கும் பாதித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்து தெரிவித்த உலக சுகாதார அமைப்பு, கல்லீரல் பாதிப்பு நோயால் இதுவரை உயிரிழப்புகள் ஏதும் ஏற்படாத நிலையில், 6 பேருக்கு தீவிர பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் அவர்களுக்கு கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை தேவைப்படுவதாக குறிப்பிட்டது.

கல்லீரல் வீக்கம் உள்ளிட்டவை இந்த நோய்க்கான அறிகுறியாக கருதப்பட்டாலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு மஞ்சள் காமாலை, வயிற்றுப்போக்கு, வயிற்று வலி உள்ளிட்டவை ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜப்பான் கடல் பகுதியில் வடகொரியா ஏவுகணை பரிசோதனை



ஜப்பான் கடல் பகுதியில் இரண்டு ஏவுகணைகளை ஏவி பரிசோதனை செய்ததாக வடகொரியா அறிவித்துள்ளது.

வடகொரியாவின் ஹேம்ஹங் பகுதியிலிருந்து ஏவப்பட்ட இரு ஏவுகணைகளும் சுமார் 25 கிலோமீற்றர் உயர்த்தில் பறந்து 110 கிலோமீற்றர் தூரத்திலுள்ள இலக்கை துல்லியமாக தாக்கியதாக அந்நாடு அதிகாரப்பூர்வமாக தெரிவித்துள்ளது.

நாட்டின் அணுசக்தித் திறனை மேம்படுத்தும் நோக்கில் ஏவப்பட்ட இந்த தந்திரோபாய ஏவுகணை சோதனைகளை வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன், நேரில் பார்வையிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வடகொரிய நிறுவனர் கிம் இல் சுங்கின் 110ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும் நிகழ்வுகளின் ஒரு பகுதியாக ஏவுகணை சோதனையை வடகொரியா நடத்தியிருக்கலாம் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

## தென்னாபிரிக்காவில் கடும் மழை - வெள்ளம்: 395 பேர் உயிரிழப்பு; 40ஆயிரம் பேர் பாதிப்பு!



தென்னாபிரிக்காவில் கடும் மழை மற்றும் வெள்ளத்தில் சிக்கி 395 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், காணாமல்போனோரைத் தேடும் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கடற்கரை நகரமான டர்பன் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடும் மழை பெய்துள்ளதுடன், அங்குள்ள வீதிகள், மேம்பாலங்கள், துறைமுகம் உள்ளிட்ட கட்டமைப்புகள் மோசமாக சேதமடைந்துள்ளன.

40 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், ஏராளமான மக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

இதற்கிடையில், கனமழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் 68 மில்லியன் அமெரிக்க டொலர்களை அந்நாட்டு அரசு ஒதுக்கியுள்ளது.

## 1000 தொன் எரிபொருளுடன் நடுக்கடலில் மூழ்கியது கப்பல்



மத்திய ஆபிரிக்காவிலிருந்து ஆயிரம் தொன் எரிபொருளை ஏற்றிக் கொண்டு ஐரோப்பா நோக்கிச் சென்ற வணிகக் கப்பலொன்று டுனிசியா அருகே கடலில் மூழ்கிய நிலையில், அதில் பயணித்த 7 பணியாளர்கள் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

Equatorial Guineaஇலிருந்து Maltaஇற்கு சென்ற கப்பல் கேப்ஸ் கடற்கரை அருகே நடுக்கடலில் மூழ்கியது. கப்பலில் பயணித்த பணியாளர்களை கடற்படையினர் மீட்ட நிலையில், மோசமான வானிலை காரணமாக கப்பலில் தண்ணீர் புகுந்து மூழ்கியதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# பங்களாதேஷில் விளையாடவுள்ள தனஞ்ஜய



பங்களாதேஷில் நடைபெறுகின்ற டாக்கா பிரீமியர் டிவிஷன் கிரிக்கெட் லீக் தொடரில் அபஹானி லிமிடெட் அணிக்காக விளையாடுவதற்காக இலங்கை கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரர் தனஞ்ஜய டி சில்வா பங்களாதேஷ் பயணமானார்.

இன்றுமுதல் 27ஆம் திகதிவரை பங்களாதேஷில் நடைபெறவுள்ள மொசாதிக் ஹொசைன் தலைமையிலான அபஹானி லிமிடெட் அணிக்காக சுப்பர் லீக் சுற்றில் ஐந்து போட்டிகளில் விளையாடும் வாய்ப்பை இலங்கை வீரர் தனஞ்ஜய டி சில்வா பெற்றுள்ளார். இதன் மூலம் இம்முறை டாக்கா பிரீமியர் டிவிஷன் கிரிக்கெட் லீக்கில் விளையாடும் 2 ஆவது இலங்கை வீரராக அவர் இடம்பிடித்தார்.

முன்னதாக, குசல் மெண்டிஸ் மொஹமதின் விளையாட்டுக் கழகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி இரண்டு போட்டிகளில் விளையாடியிருந்தார். இதில் முதல் சுற்று இறுதிப் போட்டியில் லெஜண்ட்ஸ் ஆஃப் ரூப்கஞ்ச் அணிக்கு எதிராக சதமடித்து அசத்திய குசல் மெண்டிஸ், ஆட்டநாயகன் விருதையும் தட்டிச் சென்றார்.

குறித்த டாக்கா ப்ரீமியர் லீக்கில் இருந்து நேரடியாக பங்களாதேஷ் டெஸ்ட் தொடருக்கான இலங்கை அணியுடன் குசல் மெண்டிஸ் மற்றும் தனஞ்ஜய டி சில்வா ஆகிய இருவரும் இணையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# “இந்திய அணிக்குத் திரும்ப அனைத்து முயற்சிகளையும் செய்துவருகிறேன்”

**– தினேஷ் கார்த்திக்**



டெல்லி கெப்பிட்டல்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் தினேஷ் கார்த்திக் 34 பந்துகளில் 66 ஓட்டங்களைக் குவித்து தனது அதிரடியை மீண்டும் ஒரு முறை நிரூபித்துக் காட்டினார். இந்தப் போட்டியில் பெங்களூர் அணி வெற்றிபெற்ற நிலையில் ஆட்டநாயகன் விருது தினேஷ் கார்த்திக்கிற்கு வழங்கப்பட்டது. அதை பெற்றுக்கொண்ட பின்னர் அவர் பேசியதாவது,

“எனக்கு ஒரு பெரிய குறிக்கோள் உள்ளது என்பதை நான் ஒப்புக்கொள்ள வேண்டும். நான் மிகவும் கடினமாக உழைத்து வருகிறேன். நாட்டுக்காக ஏதாவது சிறப்பாகச் செய்யவேண்டும் என்பதே எனது நோக்கம். இது எனது பயணத்தின் ஒரு பகுதி. நான் இந்திய அணியில் மீண்டும் இடம்பெற அனைத்து முயற்சிகளையும் செய்துவருகிறேன்'' என தெரிவித்தார்.

இந்நிலையில், பெங்களூர் அணியின் தலைவர் பாப் டு பிளெசிஸ் தினேஷ் கார்த்திக்கை பாராட்டியுள்ளார்.

தற்போது அவர் விளையாடும் விதம் இதுவரை இல்லாத வகையில் சிறப்பாக இருக்கிறது. அவர் மிகவும் தெளிவாகவும், அமைதியுடனும் இருக்கிறார். என குறிப்பிட்டுள்ளார்.

B CB
போட்டியை காண

## இன்றைய போட்டி

போட்டி இல: 30

நேருக்கு நேர்

| | |
|---|---|
| மொத்தம் | 25 |
| கொல்கத்தா | 13 |
| ராஜஸ்தான் | 11 |
| முடிவற்றது | 1 |

மும்பை - இரவு 7.30 மணி

# கே.எல். ராகுலுக்கு அபராதம் விதிப்பு



நடப்பு ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற மும்பை இந்தியன்ஸ் மற்றும் லக்னோ சுப்பர் ஜயண்ட்ஸ் அணிகளுக்கிடையிலான போட்டியில் லக்னோ அணி பந்துவீச அதிக நேரம் எடுத்துக்கொண்டதால் அந்த அணியின் தலைவர் கே.எல். ராகுலுக்கு ரூ. 12 இலட்சம் (இந்திய மதிப்பு) அபராதம் விதிக்கப்பட்டது.

ஏற்கனவே இந்தத் தொடரில் பந்துவீச அதிக நேரம் எடுத்துக்கொண்டதால் டெல்லி அணியின் தலைவர் ரிஷப் பண்டிற்கு ஒரு முறையும், மும்பை அணியின் தலைவர் ரோஹித் சர்மாவுக்கு இரு முறைகளும் அபராதம் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# இலங்கை அணியின் உதவிப் பயிற்சியாளராக நவீட் நவாஸ் நியமனம்

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரான நவீட் நவாஸ் இரண்டு வருட ஒப்பந்த அடிப்படையில், இலங்கை கிரிக்கெட் அணியின் உதவிப் பயிற்சியாளராக நியமனம் பெற்றுள்ளார்.

கிரிக்கெட் பயிற்சியாளராக பாரிய அனுபவத்தினைக் கொண்டிருக்கும் நவீட் நவாஸ், கடந்த 2009ஆம் ஆண்டில் இலங்கை 19 வயது கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக நியமனம் பெற்றிருந்ததோடு, இலங்கை மகளிர் கிரிக்கெட் அணிக்கும் பயிற்றுவித்த அனுபவத்தினைக் கொண்டிருக்கின்றார். அத்துடன், பங்களாதேஷ் 19 வயது கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக இருக்கும்போது தனது ஆளுகையில் 2020ஆம் ஆண்டு இளையோர் உலகக் கிண்ணத்தினை முதன்முறையாக பங்களாதேஷ் அணி வெல்வதற்கும் தனது பங்களிப்பினை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது பங்களாதேஷ் அணிக்கெதிரான டெஸ்ட் தொடரோடு, இலங்கை சிரேஷ்ட கிரிக்கெட் அணிக்காக தனது பயணத்தினை ஆரம்பிக்கவுள்ள நவீட் நவாஸ் இலங்கை கிரிக்கெட் அணிக்கு புதிய பயிற்சியாளராக நியமனம் செய்யப்பட்டிருக்கும் கிறிஸ் சில்வாவுக்கு பக்கபலமாக காணப்படுவார் என நம்பப்படுகின்றது.

பங்களாதேஷ் சுற்றுப்பயணத்தில் இலங்கை அணியின் வேகப்பந்துப் பயிற்சியாளராக சமிந்த வாஸ், சுழற்பந்துப் பயிற்சியாளராக பியால் விஜேதுங்க, களத்தடுப்பு பயிற்சியாளராக மனோஜ் அபேவிக்ரம ஆகியோர் இணைக்கப்பட்டுள்ளனர். அத்துடன், பங்களாதேஷ் தொடரில், இலங்கை கிரிக்கெட் அணியின் முகாமையாளராக மனோஜ் ஹலன்கொட செயற்படவுள்ளார்.

இலங்கை – பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் மே மாத நடுப்பகுதியில் பங்களாதேஷில் ஆரம்பமாகிறது.



# 5 முறை சம்பியனுக்கு தொடரும் சோகம்

## மோசமான சாதனைப் பட்டியலில் இணைந்த மும்பை இந்தியன்ஸ்



நடப்பு ஐ.பி.எல். தொடரில் புதிய இரு அணிகள் சிறப்பாக விளையாடி புள்ளிப்பட்டியலில் முதல் இரு இடங்களில் காணப்படும் நிலையில், 5 முறை சம்பியனான ரோஹித் சர்மா தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணி எதிர்பாராத அளவுக்கு மிக மோசமாக விளையாடிவருகிறது. இதுவரை ஆடிய 6 போட்டிகளிலும் தோல்விகளைத் தழுவியுள்ளது மும்பை இந்தியன்ஸ் அணி. மும்பை அணி முன்னதாக 5 தோல்விகளை அடைந்த நிலையில், நேற்று முன்தினம் லக்னோ சுப்பர் ஜயண்ட்ஸ் அணிக்கு எதிராக மும்பை ப்ரபோர்ன் ஸ்டேடியத்தில் நடந்த போட்டியில் முதல் வெற்றியை பதிவுசெய்யும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், லக்னோ அணி நிர்ணயித்த 200 ஓட்டங்கள் என்ற இலக்கை அடிக்கமுடியாமல் 181 ஓட்டங்கள் மாத்திரம் அடித்து 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது மும்பை அணி. இந்தத் தொடரில் இது மும்பை அணிக்கு தொடர்ச்சியாக 6ஆவது தோல்வியாகும். இதற்கு முன் ஐ.பி.எல். வரலாற்றில் 2 அணிகள் மட்டுமே ஒரு தொடரில் தொடர்ச்சியாக 6 தோல்விகள் அடைந்துள்ளன. அந்த இரு அணிகளுடன் இப்போது மும்பை இந்தியன்ஸ் 3ஆவது அணியாக இணைந்துள்ளது.

2013 ஐ.பி.எல்லில் டெல்லி டேர்டெவில்ஸ் அணியும், 2019 ஐ.பி.எல்லில் ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணியும் தொடர்ச்சியாக ஆறு தோல்விகளைத் தழுவியுள்ளன. அந்த அணிகளுடன் இப்போது மும்பை இந்தியன்ஸ் அணியும் இணைந்துள்ளது. டெல்லி டேர்டெவில்ஸ் மற்றும் ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் ஆகிய 2 அணிகளும் ஒருமுறை கூட ஐ.பி.எல். சம்பியனாகாத அணிகளாகும்.

அந்த அணிகள் பொதுவாகவே மோசமான சாதனைகளை வைத்துள்ள அணிகள். அதனால் அவை இரண்டும் இந்தப் பட்டியலில் இடம்பெற்றிருப்பதில் எந்த ஆச்சரியமும் இல்லை. ஆனால், 5 முறை சம்பியனான மும்பை இந்தியன்ஸ் அணி இந்தப் பட்டியலில் இணைந்திருப்பது ரசிகர்களுக்கும் அதிர்ச்சிதான்.

L R
போட்டியை காண

# மண்ணாய் போன 14 கோடி மன்னிப்புக் கேட்ட சஹார்



பெங்களூரில் அமைந்துள்ள தேசிய கிரிக்கெட் மையத்தில் உபாதைக்காக சிகிச்சை பெற்றுவரும் சி.எஸ்.கே. வேகப்பந்து வீச்சாளர் தீபக் சஹாருக்கு முதுகிலும் காயம் ஏற்பட்டதையடுத்து 2022ஆம் ஆண்டுக்காக ஐ.பி.எல். தொடரிலிருந்து மொத்தமாக விலகியுள்ளார்.

ஐ.பி.எல். மெகா ஏலத்தில் தீபக் சஹாரை ரூ. 14 கோடிக்கு சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தெரிவுசெய்தது. கடைசியாக விளையாடிய மூன்று ஒருநாள் ஆட்டங்களில் இரு அரை சதங்களை அடித்து தன் துடுப்பாட்ட திறமையையும் அவர் வெளிப்படுத்தினார். 2018 முதல் சி.எஸ்.கே. அணிக்காக விளையாடி வருகிறார் தீபக் சஹார். 58 ஆட்டங்களில் 58 விக்கெட்டுகளை எடுத்துள்ளார். அவற்றில் 42 விக்கெட்டுகளை பவர்பிளே ஓவர்களில் எடுத்துள்ளதால் சி.எஸ்.கே. அணியின் முக்கிய வீரராக உள்ளார்.

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான 3ஆவது இருபதுக்கு 20 ஆட்டத்தில் தீபக் சஹாரின் காலில் காயம் ஏற்பட்டது. இதையடுத்து கடந்த ஒரு மாதமாக அவர் சிகிச்சை பெற்று வருகிறார். எனினும், காயம் முழுவதும் குணமாகி, ஏப்ரல் இறுதியில் சி.எஸ்.கே. அணியினருடன் மீண்டும் இணைவார் என்று கூறப்பட்டது. உபாதைக்கு சிகிச்சை பெற்றுவரும் தீபக் சஹாருக்கு முதுகிலும் தற்போது காயம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து இந்த ஆண்டு தீபக் சஹார் முழுவதும் பங்கேற்க மாட்டார் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இன்ஸ்டகிராம் தளத்தில் தீபக் சஹார் கூறியதாவது, “அனைவரும் என்னை மன்னியுங்கள். காயம் காரணமாக இந்த வருட ஐ.பி.எல். போட்டியில் என்னால் பங்கேற்க முடியவில்லை. விளையாட வேண்டும் என்று விரும்பினேன். மீண்டும் எப்போதும்போல் அதே பலத்துடன் திரும்ப வருவேன்'' - என்றார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7